விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 17 செவ்வாய்க்கிழமை (31.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 13+ தீர்வு என நான் கூறியிருந்தாலும்

# தெரிவுக்குழுவே இறுதி முடிபு எடுக்கும்

## அதிரடியாகத் தெரிவித்தார் ஜனாதிபதி

**(கொழும்பு) 13-வது திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தான் சம்மதம் தெரிவித்திருந்தாலும் அதன் இறுதி முடிபை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே எடுக்கும். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிரடியாக அறிவித்துள்ளார்.**

இலங்கையில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுடனான சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வரும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் நடந்து கொண்டதைப் போலத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நடந்து கொள்கின்றார்கள் என கடும் தொனியில் கூறியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு வருகின்றார்கள்; பின்னர் வெளிநடப்பு செய்கின்றார்கள்; அதன் பின்னர் நிபந்தனைகளுடன் பேசவேண்டும் எனக் கேட்கின்றார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்காக அரசியல் அமைப்புக்கான 13வது திருத்தச் சட்டத்திற்கும் மேலாக செல்வதற்குதான் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுக்கு உறுதியளித்திருந்தாலும், இது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுதான் இறுதி முடிபை எடுக்க வேண்டும்.

இதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்காக அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றை நான் விரைவில் கூட்டவுள்ளேன். அதிகாரப் பரவ(20ஆம் பக்கம் பார்க்க)

## காது எங்கே? கண்ணா!



உலக முன்னாள் அதிபார குத்துச்சண்டை சம்பியனான எவென்டர் ஹொலிபீல்ட் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். 1997 ஜூன் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற அதிபார குத்துச்சண்டை போட்டியில்; வீரர் மைக்டைசனினால்ஹொலிபீல்டின் காது கடிக்கப்பட்டது. இந்நிலையில் இலங்கைக்கு வந்துள்ள ஹொலிபீல்டின் கடிக்கப்பட்ட காதை ஜனாதிபதி உன்னிப்பாக கவனிப்பதைப் படத்தில் காணலாம்.

## நுரைச்சோலை அனல் மின் நிலைய நிர்வாகமே சீனாவிடம்!

### அமைச்சர் பசில் விளக்கமளிப்பு

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு விற்பனை செய்ய முனைவதாக அண்மையில் தகவல்கள் கசிந்துள்ளன.

இந்தநிலையில் இவ்விடயம் குறித்து பொருளாதார அபிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம்நேற்று அலரி மாளிகையில் வைத்து செய்தியாளர்கள் வினவியபோது,

அதற்கு பதிலளித்த அமைச்சர்,

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவிற்கு விற்பனை செய்யும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை சீனாவிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பில் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறோம். எனவே விரைவில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக அதன் மின் உற்பத்தி நடவடிக்கைகள் அண்மைக்காலங்களாக முறையாக இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)

## ரணிலுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை தெரிவு செய்ய அண்மையில் இடம்பெற்ற தேர்தல் முறையற்றது என அறிவிக்கும்படி கோரி கட்சியின் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ண நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவென குறித்த தரப்பினருக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ரணில்(20ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் அதிரடிப் படையினரே மாணவர்களைப் படுகொலை செய்தனர்

### பசில் தெரிவித்ததாக விக்கி லீக்ஸ் தகவல்

திருகோணமலை மாணவர்களை விசேட அதிரடிப் படையினரே படுகொலை செய்ததாக தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் றொபேட் ஓ பிளேக்கிற்கும் அப்போதைய ஜனாதிபதியின் ஆலோசகரான பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்வதில் மெய்யாகவே நாட்டம் காட்டுகின்றார் என பிளேக் தெரிவித்துள்ளார். இணைத்தலைமை நாடுகள் குறிப்பாக அமெரிக்காவின் ஒத்துழைப்பை ஜனாதிபதி கோரியதாக குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் விசேட அதிரடிப்படையினருக்கு தொடர்பு இருப்பதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளதாக பிளேக் தெரிவித்துள்ளார்.


எனினும் மாணவர்கள் மீது துளைக்கப்பட்ட குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் விசேட அதிரடிப்படையினருக்கு சொந்தமானதல்ல.

யாரையேனும் கொலை செய்யும்போது விசேட அதிரடிப்படையினர் வேறு துப்பாக்கிகளை பயன்படுத்தி இருக்கக்கூடும் என பசில் தெரிவித்(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தை வீழ்த்த சிறந்த இராணுவம் தேவை

### இல்லையேல் முடியாது என்கிறார் ரணில்

(கொழும்பு)




தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமாயின் சிறந்த இராணுவம் ஒன்று தனக்குத் தேவைப்படுவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறந்த இராணுவம் ஒன்று இல்லாமல் இந்த அரசாங்கத்தை வீழ்த்துவது கடினம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் சக்தி என்ற இராணுவம் தம் வசம் இருந்தால் ஊழல் நிறைந்த இந்த அரசுக்கு எதிராக போராட இலகுவாக இருக்கும். ஊடக சக்தியின் மூலம் அரச அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என தமது கட்சியின் உறுப்பினர்கள் சிலர் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு அரச அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இழந்த கச்சதீவை மீட்க வேண்டும் தமிழக சட்டசபையில் ஆளுநர் உரை



தமிழக மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இழந்த கச்சத்தீவை மீண்டும் இந்திய மத்திய அரசு மீட்க வேண்டும் என தமிழக ஆளுநர் ரோசய்யா தெரிவித்துள்ளார்.

அத்துடன் முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் உரிமையை விட்டுக் கொடு க்க மாட்டோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழக சட்டபை நேற்று கூடியபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழக மீனவர்கள் உரிமையை பாதுகாக்க பாக் ஜல சந்தியில் மீன்பிடி உரிமையை பாதுகாக்க வேண்டும்: மேலும் கச்சைதீவை மீட்க மத்திய அரசு இலங்கையிடம் பேச்சுவார்த்தை நடதத வேண்டும் என்றார். (ந-11)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத்தமிழருக்காக உயிர்த்தியாகம் செய்த முத்துக்குமாரின் நினைவு அனுஷ்டிப்பு




(சென்னை)

வன்னியில் நடந்த போரை நிறுத்தக்கோரி 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்த முத்துக்குமாரின் நினைவு நாள் அனுஷ்டிப்பு நேற்று முன்தினம் சென்னை கொளத்தூரில் நடைபெற்றது.

இதில் பலர் கலந்து கொண்டு முத்துக்குமாருக்கு வீரவணக்கம் செலுத்தினர். (ந)

# வெளிநாட்டவரை வெறுக்கும் ஹெல உறுமய-விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சி வெளிநாட்டவரை வெறுக்கும் தன்மையுடைய கட்சி என அமெரிக்கா அடையாளப்படுத்தியுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உத்தேச மதமாற்றச் சட்ட மூலம் தொடர்பில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தல்களில் பெரும்பான்மை மக்களின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி மதமாற்ற சட்டத்தை அமுல்படுத்த முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டவரை வெறுக்கும் மனோநிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய கட்சி திகழ்கின்றது என அமெரிக்கா அடையாளப் படுத்தியுள்ளது. (ந-11)

# புலிகள் மீதான தடை வழக்கு பெப்.20 வரை ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள்மீதானதடையை நீக்க வேண்டும் எனக்கோரி தொடரப்பட்ட வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வியக்கத்தின் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையில் மத்திய அரசால் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

இத்தீர்ப்பாயத்தில் கருத்துத் தெரிவிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டதால் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இதன்போது தமிழக அரசின் சார்பில் நீதிமன்றில் சமுகமளித்த வழக்கறிஞர் நவநீதகிருஸ்ணா் இவ்வழக்குத் தொடர்பாக பதில் மனுதாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கைக்கு மனுதாரர் வைகோவும் சம்மதம் தெரிவித்தார்.

இதையடுத்து இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந)


# சட்டவிரோத மின்சாரப் பாவனை வடமராட்சியில் தேடுதல் வேட்டை தீவிரம்

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் நேற்று இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையின் போது சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற 9 பேர் பிடிபட்டனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த 2 நாட்களாக வடமராட்சிப் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் சட்ட விரோத மின்சாரம் பெற்ற 52 பேர் அகப்பட்டமை தெரிந்ததே. (ந-11,24)



மட்டக்களப்பு காத்தான் குடி கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதி காலை 2மணியளவில் 16 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்ட பாரிய திமிங்கலம் கரையொதுங்கியுள்ளதை படத்தில் காணலாம்.

# பொன்சேகாவுக்காக ஆர்ப்பாட்டம் செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவருமான சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஜனநாயகத்துக்கான மக்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஜனநாயக விரும்பிகள் என சகல தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டு இரண்டு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருப்பதாக ஜனநாயகத்துக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (ந-11)

# தண்டுவான் அ.த.கவின் மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் மு/தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.பன்னீர்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்விவலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலனும் சிறப்பு விருந்தினர்களாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பி.ரிரேஸ்குமார், ஒட்டிசுட்டான் கோட்டைக்கல்வி அதிகாரி த.பங்கயச்செல்வன், ஜனாதிபதியின் முல்லை மாவட்ட விசேட செயற்திட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம், 64ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஏச்.வி.ஏ.சேனாரத்ன துணுக்காய் கல்விவலய கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.ரவீந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-3,15)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரபூபதி கணபதிப்பிள்ளை



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், சங்கீதம் வலிகாமம்) அவர்களின் பாசமிகு பாரியார் திருமதி சந்திரபூபதி அவர்கள் கடந்த 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 30.01.2012 திங்கட்கிழமை நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்: சு.கணபதிப்பிள்ளை (சங்கீதபூஷணம்)
தொ.பே:-0778946101 (7398)

# சர்வதேச நாணய நிதியம் வழங்கிய இறுதிக்கடனை நிராகரித்தது அரசு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்த 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையின் இறுதிக் கொடுப்பனவான 800 மில்லியன் டொலரை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ளமாட்டாது எனமத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று தெரிவித்துள்ளார்.

நெகிழும் நாணய மாற்றுவீத முறையை கடைப்பிடிக்க மத்திய வங்கி மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், கடந்த செப்ரெம்பர் மாதம் விடுவிக்கப்பட வேண்டிய 8 ஆவது தவணைக் கொடுப்பனவை சர்வதேச நாணய நிதியம் நிறுத்தி வைத்திருந்தது.

இதனையடுத்து நாணய மாற்றுவீதக் கொள்கை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கத்துக்கு முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில், இலங்கைக்கு தற்போது விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் 8ஆவது தவணைக்கொடுப்பனவை வழங்க முன்வந்திருந்த வேளையிலேயே, இக்கடனைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இக்கடன் கொடுப்பனவுக்கு விதித்துள்ள உயர்ந்த வட்டிவீதமே இதற்கான காரணம் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாம் மேலும் கடன்படாதிருப்பின் இதுவரை பெற்ற கடனுக்கு 1.1 சதவீத வட்டிகொடுத்தால் போதுமானதாக இருக்கும். சர்வதேசநாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட முழுக்கடனான 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் நாம் பெற்றுக்கொண்டால் 3.1 சதவீத வட்டியை செலுத்தவேண்டும் என அவர் கூறியுள்ளார். (ந-11)

# கொக்குவில் இந்து மாணவர்களுக்கு

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் 2011ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கானதகைமை பெற்ற மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பப் படிவத்துடன் எதிர்வரும் மூன்றாம்திகதிவெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்குகல்லூரிக்குசமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் கேட்டுள்ளார். (ந-11)

# வேலையற்றப் பட்டதாரிகளின் அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பெருமாள் கோயில்முன்றலில்நடைபெறவுள்ளது.

வேலையற்ற அனைத்து பட்டதாரிகளையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தலைவர் பா.விஜேந்திரன் கேட்டுள்ளார். (ந-11)

## தவறிவிட்டது

முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீ ஆனந்தராஜா

தொலைபேசி இல : 077 6544565 (C-5745)

# இன்று ஒரு தகவல்

## எது செல்வம்?

இரவு நேரம் ஒரு மன்னன் குதிரை மேலே ஏறி நகர் வலம் வந்து கொண்டிருந்தான்.

அடிக்கடி அவன் இப்படி வருவது வழக்கம்.

நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள்.சுகமாக இருக்கிறார்களா? சிரமம் ஏற்பட்டுள்ளதா? அவர்களுடைய உண்மையான வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது. இப்படியானவற்றை நேரடியாக கேட்டு புரிந்து கொள்வதற்காக அந்த அரசன் இப்படி நகரை சுற்றி வருவது உண்டு.

இப்படி வரும் போதெல்லாம் தவறாமல் அவன் கண்ணிலே படுகிற காட்சி ஒன்று உண்டு.

அதாவது ஒரு மரத்தடியிலே ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருப்பான். சில சமயம் உட்கார்ந்து கொண்டிருப்பான். ஆனால், எந்தநேரம் பார்த்தாலும் விழித்துக் கொண்டே இருப்பான். தூங்குகிறவன் மாதிரி இல்லை.

ஒவ்வொரு தடவையும் அவன் அந்தப் பிச்சைக்காரனை அதே இடத்திலே பார்ப்பது வழமை. அப்படிப் பார்க்கும் போதெல்லாம் மன்னன் மனதினுள் ஒரு சந்தேகம். இந்தப் பிச்சைக்காரன் ஏன் தூங்குவது இல்லை.

ஒருநாள் அந்த மன்னன் பிச்சைக்காரன் இருந்த அந்த மரத்துக்கருகில் கொண்டுபோய் குதிரையை நிறுத்தினான். கீழே இறங்கினான்.

அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்துக் கேட்டான். ''இதோ பார் நான் தினமும் இந்த வழியாக வந்து கொண்டிருக்கும் போதெல்லாம் உன்னைப் பார்த்துவிட்டுத்தான் செல்கிறேன். உனது செயல்கள் வியப்பாக இருக்கிறது'' என்றார்.

''என்ன வியப்பு?''

''நீ தூங்கியதை நான் பார்த்ததே இல்லை. நடு இரவு வேளைகளில் கூட நீ விழித்துக் கொண்டு இருக்கிறாய். நீ ஏன் தூங்குவதேயில்லை. இதுதான் என்னுடைய சந்தேகம்''

பிச்சைக்காரன் மாதிரி காட்சியளித்த அந்தத் துறவி இதற்குப் பதிலளித்தான்.

''காவல் காத்துக் கொண்டிருக்கிறேன்...!''

''காவலா?''

''ஆமாம்... ஏதோ ஒன்று எனக்குக் கிடைத்துள்ளது. அதைக் கட்டிக் காப்பாற்றுவதற்குத்தான் இருக்கிறேன்''

அரசர் இதைக் கேட்டதும் இங்கேயும் அங்கேயுமாகத் திரும்பிப் பார்க்கிறார். பக்கத்திலே ஒரு பிச்சைப்பாத்திரம்தான் கண்ணிலே தென்பட்டது. வேறு எதுவும் அவனிடம் இருக்கவில்லை.

''என்ன தேடுகிறீர்கள்?'' என்றார் துறவி.

''என்ன உங்களுக்குக் கிடைத்துள்ளது'' என்பது பற்றி தேடுகிறேன் என்றார் அரசன்.

''அதற்கு ஏன் வெளியில் தேடுகிறீர்கள்?''

மன்னன் விழித்தான்.

அதற்கு அவன் ''இங்கேயெல்லாம் பார்க்காதீர்கள். அது அங்கே இல்லை... இங்கேயே இருக்கிறது!''

தொடர்ந்து சொன்னார்... ''எனக்குக் கிடைத்தது எனக்குள்ளே இருக்கிறது.அதை இழக்கக்கூடாது என்பதற்காகத்தான் விழித்துக் கொண்டேயிருக்கிறேன்'' தூங்கினால் அது பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது. மயக்கத்தில் நான் அதை மறந்தாலும் மறந்துவிடுவேன்... அதற்காகத்தான் இந்த விழிப்புணர்வு!

இதைக் கேட்ட அரசன் ''எனக்கு ஒன்றுமே தெரியவில்லை'' என்றார்.

''உள்ளே போக முடியவில்லையென்றால் உங்களுக்கு எப்படி அது தெரியும்?''

''உன்னிடம் இருக்கிறது அவ்வளவு பெரிய செல்வமா?''

''ஆமாம்''

''அப்படியென்றால், என்னிடம்தான் நிறைய செல்வம் உள்ளது''

''உண்மைதான்''

''அப்படி இருக்கும்போது உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?''

''மன்னா! பெரிய வித்தியாசம் இல்லை. நீங்கள் வெளிப்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறீர்கள். நான் வெளிப்பக்கமாக ஏழையாக இருக்கிறேன். நான் உள்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறேன். நீங்கள் உள்பக்கமாக பரம ஏழையாக இருக்கிறீர்கள்''

''அப்படியென்றால்... நீங்கள் புறத்தில் செல்வந்தன். நான் அகத்திலே செல்வந்தன். அவ்வளவுதான்''

இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

விழிப்புணர்வோடு நாம் வாழ்ந்தால் நாம் எங்கே இருக்கிறோமோ அதுதான் சொர்க்கம். உறங்கிக் கொண்டே நாம் வாழ்ந்தால் நாம் இருக்கின்ற இடமே நரகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழில் அமைக்கப்படும் சிறைச்சாலையை புனர்வாழ்வு நிலையமாக கருதுங்கள்

## அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர் டக்ளஸ்

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போதியளவு உதவிகள் வழங்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் புதிய சிறைச்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் பண்ணை வீதியிலுள்ள சிறைச்சாலைக்கு சொந்தமான காணியில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் அரசின் கொள்கைக்கமைய இன்றைய தினம் இந்த சிறைச்சாலை அமைக்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டப்படுகின்றது.

இந்த சிறைச்சாலைக்கான வரைபடத்தைப்பார்க்கும்போது இது ஒரு சிறைச்சாலையாக அல்ல. ஒரு உல்லாச விடுதியைப் போல் அமைய இருப்பதை அறிய முடிகிறது.

சமூகத்தில் தவறு செய்பவர்கள் தண்டனை அனுபவிப்பதற்கு மாத்திரமல்லாது அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நிலையமாகவும் இது அமையும்.

சிறைச்சாலை எனும்போது ஒரு சமூக விரோதப் போக்கில் பார்க்கும் மனோ நிலையை விட்டுவிட்டு இதனை ஒரு புனர்வாழ்வு நிலையமாகவும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய சிறைச்சாலையானது போதிய வசதிகளின்றி காணப்படுகிறது.புதிய கட்டடம் அமையப் பெறுவதற்கு முன்பதாக இதற்கொரு மாற்று வழிவகை செய்ய வேண்டுமென நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் பல்வேறு தரப்பினரும் என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களின் எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமானதாக அமைத்துக் கொள்வதற்கு என்னால் இயன்ற உதவிகளை வழங்குவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

எதிர்காலத்தில் கௌரவமான பிரஜைகளாக இவர்களை வாழ வைப்பதற்கு என்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்வேன். எனவே, இவர்களது தேவைகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுமானால் அது குறித்து முழு அவதானம் செலுத்துவேன்.

அதே நேரம் சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு எனது அமைச்சின் மூலம் பல்வேறு கைப்பணித்துறைசார்ந்த தொழிற் பயிற்சிகளையும் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

இதன்மூலம் அவர்களது சிந்தனைகள் மாற்றப்பட்டு ஒரு நல்ல நிலைக்கு மன ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அவர்களைக் கொண்டுவர முடியும் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, இந்த அமைச்சின் செயலாளர் ஆர்.திஸாநாயக்க, சிரேஷ்ட ஆலோசகர் எம்.சதீஸ்குமார், சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி, யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எனப்பலர் கலந்து கொண்டனர்.

(அ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 |
| பச்சைமிளகாய் | 80-90 | 90 |
| தக்காளி | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 |
| கோவா | 40 | 60 |
| கரட் | 40 | 70 |
| பூசணி | 60 | 30 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 35-60 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 |
| பாகற்காய் | 100-120 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 |
| லீக்ஸ் | 65 | 60 |
| பீற்றூட் | -- | 70 |
| கறிமிளகாய் | 160 | 140 |
| முருங்கைக்காய் | 300 | 350 |
| போஞ்சி | 40 | 40 |
| கத்தரிதம்புள்ள | 35 | 30 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 |
| வெங்காயப்பூ | -- | -- |

# இராசி பலன்

*31.01.2012*

*(தை 17,செவ்வாய்க்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு*

*அட்டமி முன்னிரவு 10.59 மணிவரை*

*பரணி பின்னிரவு 5.58 மணிவரை*

*இராகுகாலம் 3.36-5.06 மணிவரை*

*சுபநேரம் 11.06-12.36 மணிவ்வரை*

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை கூடும், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,பிரியமான சிலருக்காக பெரும் தொகை ஒன்றைச் செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும், பண வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், போசன சுகமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**கடகம்** அந்நியர் உதவியுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் கைகூடலாம், பயணத்தால் பண வரவு கிடைக்கும், புதிய பொருட்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், மறைமுகப் போட்டிகள் குறைந்து வியாபார விருத்தியேற்படும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** கவலைகள் குறைய கந்தனை வழிபட வேண்டிய நாள்,எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்,தொழில் வளர்ச்சியுண்டு, கௌரவமான நாள்,குடும்பத்தில் பந்தபாசங்கள் அதிகரிக்கும்,போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எதிரிகள் விலகுவர்,தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்,மனதில் உற்சாகம் பிறக்கும்,சுவாரஸ்யமான நாள்,விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள்,மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்,புத்தி சாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**மகரம்** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரும்,இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் வந்து சேரும் நாள், பயணங்களால் நன்மையுண்டு.

**கும்பம்** சிறப்பான நாள்,பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மீனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்,வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

# கூலிவேலை செய்து பிழைக்கின்றோம் வேலைவாய்ப்பை பெற்றுத்தாருங்கள்

## முன்னாள் போராளிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உங்களது வாழ்விடங்களை நான் வந்து பார்வையிட வேண்டும் என விரும்புகிறீர்களா என்று புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளிடம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கேள்வி கேட்டிருந்தார். அதற்கு ஒரு சிலரைத் தவிர ஏனையோர் மௌனமாக இருந்தனர்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் கஜதீர, முன்னாள் போராளிகளைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் சந்திரசிறி கஜதீர முன்னாள் போராளிகளிடம் உங்களுடைய வாழ்விடங்களை நான் நேரில் வந்து பார்வையிட வேண்டும் என விரும்புகின்றீர்களா? அவ்வாறு விரும்புவர்கள் உங்களது கைகளை மேலே உயர்த்துங்கள் எனத் தெரிவித்தார்.

இதன்போது 10 பேருக்கும் குறைவானர்களே தமது கைகளை உயர்த்தி அமைச்சருக்கு சம்மதம் தெரிவித்தனர்.

ஏனையோர் அமைச்சர் தங்களது வாழ்விடங்களை வந்து பார்ப்பதை விரும்பாதவர்கள் போன்று மிகவும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

அமைச்சருடனான சந்திப்பில் 100 பேருக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் தங்களது குடும்பங்களுடன் சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை சுயதொழில் கடன் உதவிக்கு விண்ணப்பித்து பலமாதங்களாகியும்கடன் உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என முன்னாள் போராளிகளில் பலர் விரக்தியுடன் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க உதவிகளும் கிடைக்கவில்லை எனவும் கூலி வேலைகள் செய்தே வாழ்ந்து வருகின்றோம்.

பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றோம் எனவும் முன்னாள் போராளிகளில் பெருமளவானோர் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த போட்டி

(கொக்குவில்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த வன்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4,5,7 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். கொக்குவில் மத்திய சனசமுக விளையாட்டுக்கழகமும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதவுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். அரியாலை விளையாட்டுக் கழகமும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டு கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அணியும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டு கழகத்தை எதிர்த்து யாழ். அரியாலை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளதாக கொக்குவில் வளர்மதி ஒன்றிணைப்பு நிலைய செயலாளர் வி.ஜதுசன் அறிவித்துள்ளார். (அ-2)

# மாடியிலிருந்து வீழ்ந்த இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மூன்றாவது மாடியில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தவறி கீழே விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன் தினம் மதியம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மூன்றாவது மாடியில் கட்டட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தவறுதலாக பின்பக்கமாக குறித்த இளைஞன் காலை வைத்தபோதே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைதடியைச் சேர்ந்த ந.காண்டீபன் (வயது 26) என்ற நபரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-2-4)





யா/ சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் தி. தேவதயாளன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள், தரம் 1 மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரமுகர் க. பாலசிங்கம் ஆரம்பித்த வங்கிக் கணக்கு புத்தகத்தை தரம் 1 மாணவி ஒருவருக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலவச சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2011 ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச சீருடை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (அ)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# வீதி மூடுதல் பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு வேலைகளுக்காக பிரதான மின்மாற்றிகளை மாற்றி அமைக்க வேண்டியுள்ளதால் யாழ்.- பருத்தித்துறை வீதியின் முத்திரைச் சந்தியில் இருந்து சட்டநாதர் கோவில் வரையுள்ள பகுதி நாளை புதன்கிழமை காலை 7.30 மணிமுதல் மாலை 5 மணிவரை மூடப்பட்டிருக்கும் என யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளார்.

இதனால் அன்று மட்டும் கோவில் வீதியால் சென்று சட்டநாதர் வீதிக்கூடாக தமது பிரயாணத்தை மேற்கொள்ளுமாறும் இப்பாதை மாற்றீடு காரணமாக ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

# கடற்தொழிலாளர் பிரச்சினை குறித்த விசேடகலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் பங்குகொள்ளவுள்ளார்.

வடமாகாணத்தில் சமகாலத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டங்கள், இறால் வளர்ப்புத் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதுதவிர இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் காரணமாக இங்குள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

## க.பொ.த.உயர்தர பெறுபேறு

யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்

*கணிதப்பிரிவு*

ப.கிரிதாஸ்-ஏ2பி, ந.சாருசன்-பி2சி

*உயிரியல் பிரிவு*

ம.பொன்வேல்-பி2சி, தி.தினேஸ் குமார்-பிசிஎஸ்

*கலைப்பிரிவு*

சி.திவ்வியா-ஏசிஎஸ், த.கலைச்செல்வி-பி2சி, ஜெ.ஜெயக்கொடி 3பி. (அ)

# அறுவர் கொண்ட குழு தாக்கியதில் தோட்டத்தில் நின்ற இருவர் காயம்

(மாதகல்)

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் தாக்குதல் மேற்கொண்டதில் இருவர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் மாதகல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாதகல் பகுதியைச் சேர்ந்த சி.சிவகுமார் (வயது-49), ரா.செல்வரத்தினம் (வயது-38) ஆகியோர் அப்பகுதியிலுள்ள தமது தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தபோது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த அவர்கள் இருவரும் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-6)

# யுனைடட் மோட்டர்ஸ் குழு யாழ் மண்ணிலும்




## இன்று கோலாகலத் திறப்பு விழா

புதிய வாகனங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளைக் கொண்டு இப்பொழுது யாழ் மண்ணிலும் யுனைடட் மோட்டர்ஸ் குழு தடம் பதிக்கிறது.

இல. 29, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். 021 4923680




**United Motors Lanka PLC**

**Unimo Enterprises Limited**
(A fully owned subsidiary of United Motors Lanka PLC)

**Orient Motor Company Limited**
(A fully owned subsidiary of United Motors Lanka PLC)

(சி-5743)

# விடுதலைப் புலிகளுடனான போரில் அடிப்படை கொள்கைகளை மீறியவர் சவேந்திர சில்வா

## அமெ.ம.உ. அமைப்புக்கள் ஐ.நாவுக்கு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக்குழுவுக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்புகள் பலவும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் இந்த நியமனத்தை நிராகரிக்குமாறும் ஐ.நா. பொதுச்செயலரிடம் கோரியுள்ளன.**



the centre Justice Accountability and the centre for Constitutional Rights ஆகிய அமைப்புகள் இணைந்து இது தொடர்பாக கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

பொதுமக்கள் கொல்லப்பட்ட கணக்கிடப்பாத அளவிலானோர் பாதிக்கப்பட்ட அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்கள் தொடர்பான அடிப்படை கொள்கைகள் மீறப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா முக்கிய பாத்திரம் வகுத்தவர் என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதாபிமான நடவடிக்கை என்று இலங்கை அரசாங்கம் இதனைக் கூறியுள்ள போதும் ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இந்தப் போரில் போர்க் குற்றங்களும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றுள்ளதாக நம்பகமான சாட்சியங்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்செயலரிடம் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கிய 58 ஆவது டிவிசன் இந்தக் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டதாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக்குழுவுக்கு நியமிக்கப்படும் ஒருவரது தலைமைத்துவ ஆற்றலும் குற்றச்சாட்டுகளற்ற அப்பழுக்கற்ற தன்மையும் தகைமைகளாக கருதப்பட வேண்டும்.

சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டால் சிறப்பு ஆலோசனைக்குழுவுக்கான அவரது நியமனம் உலகத்துக்கு திகைப்பூட்டும் செய்தியாக அமையும்.

எனவே, ஐ.நா. பொதுசெயலர் பான் கீ மூன் சவேந்திர சில்வாவின் இந்த நியமனத்தை நிராகரிக்க வேண்டும் அல்லது அவரது நியமனத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அந்த அமைப்புகள் கோரியுள்ளன.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தில் போர்க்குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இருந்து விலக்குப் பெறுவதற்கு சவேந்திர சில்வாவுக்கு இராஜதந்திர விலக்குரிமை உள்ளதாக அவரது சட்டவாளர் கூறியிருந்தார். ஆனால், நீதிமன்றம் இது தொடர்பாக எந்த முடிவையும் இன்னமும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக்குழுவுக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட விவகாரத்தில் இருந்து ஒதுங்கி நிற்க ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் முடிவு செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மு/பாலிநகர் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி யோ. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் சி.குணபாலன், மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் கு.சிவலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(அ-3-15)

# நாட்டின் சட்ட ஒழுங்குகள் இருவிதங்களில் உள்ளன

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு விதமாகவும் ஏனையவர்களுக்கு மற்றுமொரு விதமாகமும் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அடக்கு முறைக்கு எதிராக கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் போராட்டம் நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

வேறு தரப்பினரை ஐக்கிய தேசியக் கட்சியின் போராட்டங்களில் இணைப்பதனை விடவும் முதலில் கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த அநீதிகளை தட்டிக் கேட்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி பாரியளவில் போராட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை வழிநடத்தக் கூடிய அதிகாரம் தமக்குக் காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஒழுக்க விதிகளைப் பேணுவதற்காக கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்கவும் உறுப்பினர்களை வழிநடத்தவும் முழு அதிகாரம் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் ஜனநாயக அடிப்படையில் கட்சி விவகாரங்களில் ஆலோசனை வழங்குவதற்கு எந்தவொரு உறுப்பினருக்கும் உரிமை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கல்வியை தனியார் மயப்படுத்தும் திட்டம் உடன் நிறுத்தப்பட வேண்டியது அவசியம்

## அநுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கல்வித்துறையில் இன்று பாரிய பிரச்சினைகள் காணப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது. முதலாம் தரத்திற்கு மாண வர்களை சேர்ப்பதில் இருந்தே பிரச்சினைகள் ஆரம் பிப்பதாக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மீதமுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வியை தனியார் மயப்படுத்தும் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

தேசிய பாடசாலை கட்டமைப்பில் ஏழை மக்களின் பிள்ளைகளே உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதியின் பிள்ளைகளோ உயர்கல்வி அமைச்சின் பிள்ளைகளோ அதில் உள்வாங்கப்படவில்லை எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அதிகளவு தனியார்மயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் பல துறைகளிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார். (அ-2)


JAFFNA HINDU LADIES COLLECE

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக்குழு
வருடாந்தப் பொதுக்கூட்டம்-2011

அன்புடையீர்,

யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க, அபிவிருத்திக்குழு என்பவற்றின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, இப்பொதுக் கூட்டத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் தவறாது கலந்து கல்லூரி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. தலைமையுரை:- திருமதி. வே.பேரின்பநாதன் (அதிபர்)
3. செயலாளர்:- செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
4. பொருளாளர்:- நிதி அறிக்கை சமர்ப்பித்தல்
5. புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு
6. கலந்துரையாடல்
7. கல்லூரிக்கீதம் :- கல்லூரி மாணவிகள்

திருமதி வே.பேரின்பநாதன்
தலைவர் (அதிபர்).

(7400)

திரு. மு.சபாம்பிள்ளை
செயலாளர்.


# மன்னார் பொது வைத்தியசாலையில் சடலத்தை மீள பெறுவதில் பெரும் சிரமம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள தமிழர்களுடைய சடலங்களை மீள பெற்றுக் கொள்வதில் பல மணிநேரம் தாமதம் ஏற்படுவதாகவும் வைத்தியசாலை தரப்பினர் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாகவும் பொது மக்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு சென்று உயிரிழந்த மற்றும் அகால மரணமான தமிழர்களுடைய சடலங்களை மீளப் பெற்று இறுதி கிரியைகள் நடத்துவதில் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

குறித்த தமிழர்களுடைய சடலங்கள் பல மணி நேரத்திற்கு மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்படுகின்றது.

பொலிஸாரின் விசாரணை, மரண விசாரணை உட்பட சகல விடயங்களும் பூர்த்தியாகின்ற போதும் பிரேத அறையில் உள்ள ஊழியர்கள் சடலத்தை சீர் செய்து உரியவர்களிடம் ஒப்படைப்பதில் கடந்த சில தினங்களாக தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

குறித்த சடலங்களை பிரேத பரிசோதனை செய்த பின் உரியவர்களிடம் வழங்குவதே வழமை எனினும் குறித்த வேலைத்திட்டத்திற்கு அதிகளவான பணம் பெற்றுக் கொள்கின்றனர். சடலத்தினை பரிசோதனை செய்வதற்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும் உடை மாற்றுவதற்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் பெற்றுக் கொள்ளப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பொது வைத்தியசாலை அரசவைத்தியசாலையாக காணப்படுகின்ற போதும் குறித்த செயற்பாடுகளுக்கு மக்களிடம் அதிகளவு பணம் அறவிடப்படுகின்றது. (அ-2)

# கப்பற்றொழில் வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு

✦ International Passport ஐ வேலை செய்ய உத்தேசித்துள்ள காலத்தோடு சேர்த்து இன்னும் ஒரு வருட காலத்திற்குச் செல்லுபடியாக வைத்திருத்தல் வேண்டும். உதாரணமாக நீங்கள் ஒரு வருடம் கப்ப[illegible] தொழில் செய்ய உத்தேசித்திருப்பின் [illegible]றந்தது இருவருடங்கள் செல்லுபடியான [illegible]ssport இருத்தல் அவசியம். வெளிநாடுகளில் புதுப்பிக்கும் வசதிகள் இருந்தாலும் செல்லுபடியாகும் காலம் நிறைய இருந்தால் கப்பலில் நிற்கும் போது பல சிரமங்களைத் தவிர்க்கலாம்.


✦ International Health Book (Health card அல்லது Vaccination card) பெற்று வைத்திருத்தல். இவை எல்லா நாடுகளுக்கும் தேவை இல்லை. ஆனால், இன்னமும் சில ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்குச் சென்று வருவதற்குத் தேவைப்படும்.

✦ சரியான முறையில் உங்களின் Curriculum vitae அதாவது bio-data வை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அத்தோடு அனுப்ப வேண்டிய covering letter documents (passport ,CDC, certificate போன்றவை) களை email இல் அல்லது fax இல் அனுப்புவதற்கு ஆயத்தமாக வைத்திருங்கள். எந்தக் Computer இலும் சுலபமாகப் பாவிக்கக் கூடியமாதிரியானதும் USB port இல் பாவிக்கக்கூடிய மாதிரியான USB Flash Drive இல் சேகரித்து வைத்திருத்தல் நல்லது.

✦ Email இல் கப்பல் கம்பனிகளுடன் தொடர்பு வசதி ஏற்படுத்துதல். மலிவாகவும் சுலபமாகவும் மேற்கூறிய Bio-data மற்றும் covering letter என்பவற்றை பல கம்பனிகளுக்கு email மூலம் அனுப்பலாம்.

✦ Telephone வசதி ஏற்படுத்துதல். Skype போன்ற இலவச Telephone கள் அநேகமான Shipping கம்பனிகள் பாவிக்கின்றன, Telephone இல் பேசும் போது அதற்கான நடைமுறைகளைப் (good telephone manners) பின்பற்றுதல். மற்ற நாடுகளின் நேர வித்தியாசங்கள் அறிந்து பேசுதல் வேண்டும். Mobile telephone பாவித்தல் மிகவும் பயன்தரும். ஆனால் செலவு அதிகம். Bio- data வில் உங்களின் mobile telephone ஐ குறிப்பிட்டிருந்தால் அதில் பதில் சொல்வதற்கு எந்நேரத்திலும் தயாராக Mobile telephone ஐ வைத்திருத்தல் வேண்டும்.

✦ உங்களுக்குத் தெரிந்தவர்கள் வேலை செய்யும் கம்பனிகளுடன் வேலை செய்பவர்கள் மூலம் அல்லது நீங்களாக கப்பல் கம்பனிகளுடன் தொடர்பு கொள்ளல். இது மிகவும் முக்கியமான முறை. அநேகமான



seaman மார்கள் இம்முறையில் தான் கப்பலில் சேர்ந்து வருகின்றனர்.

✦ வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் கப்பல் கம்பனிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி வேலைவாய்ப்பை அதிகரித்தல்.

✦ Vaiswa.com உடன் தொடர்பு கொண்டு மேலதிக உதவிபெறுதல்.

✦ Internet மூலம் கப்பல் owner மற்றும் கப்பல் கம்பனிகளின் Database ஐ அறிந்து கொண்டு அவர்களுக்கு உங்களது curriculum vitae அதாவது bio- data அனுப்பி வேலைவாய்ப்பு பற்றி அறிதல் வேண்டும். இலங்கையர்கள் வேலை செய்யும் கம்பனிகளுடனும் வெளிநாட்டு crew வை எடுக்கும் கம்பனிகளுடனும் தொடர்புகள் கொள்வது கூடிய பலனை அளிக்கும். எந்தெந்தக் கம்பனிகள் cadet ஆக வேலைவாய்ப்பு கொடுக்கின்றார்கள். எவை scholarship கொடுக்கின்றார்கள் போன்ற விபரங்களையும் கண்டு தொடர்பு கொள்ளல் வேண்டும்.

✦ முதற் கப்பல் ஏறும் போது சிறிய கம்பனி, பெரிய கம்பனி சம்பளம் கூடக் குறைவு மச்சான், மாமன் அல்லது சினேகிதர்கள் உள்ள கப்பல், தமிழர் உள்ள கப்பல் என்று பாராது எதுவென்றாலும் சேர முயற்சித்தல் வேண்டும். இரண்டாவது முறை கப்பலில் சேரும் பொது அனுபத்தை வைத்து விருப்பமான கப்பல்களில் சேருவது சுலபம். தமிழர்கள் இல்லாத கப்பலில் வேலை செய்பவர்களுக்கு இலகுவில் Spoken English பழக சந்தர்ப்பம் உண்டு.

✦ எந்த நேரத்திலும் கப்பலில் சேர்வதற்கு ஆயத்தமாக இருத்தல். அநேகமாக கப்பல் கம்பனிகள் ticket கொடுப்பார்கள் சில வேளைகளில் நீங்கள் ticket book செய்து செல்ல வேண்டியிருக்கலாம். அதற்கான பணம் பின்னர் அவர்கள் தரலாம். ஒரு travel agent ஐ தயார்படுத்தி வைத்துக் கொள்ளலாம். மற்றும் கப்பலில் வேலை செய்வதற்கு தேவையான உடுப்பு, படிப்பதற்கு புத்தகங்கள் ஆகியன தயார்படுத்தி வைத்திருத்தல்.

கப்பலில் சேர்வதற்காக நிற்கும் காலத்தை பிரயோசனமாகப் பயன்படுத்தும் முறைகள் சில:

✦ மேலதிக short course களைப் படிக்கலாம். உதாரணமாக International Computer Driving Licence (ICDL) அல்லது Efficient Deck Hand (EDH) அல்லது Tanker familiarisation போன்ற கப்பலுக்கான certificate உடையவர்களுக்கு chance அதிகம்.

✦ வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்துடன் அல்லது Vaiswa.com என்ற மின் அஞ்சலில் தொடர்பு கொண்டு சந்தேகங்கள் அல்லது கப்பலில் சேருவதற்கான மேலதிக வழிவகைகளைக் கேட்கலாம் அல்லது உதவி பெறலாம்.

✦ கப்பலில் சேரும் போது கையொப்பமிடும் ஆவணங்கள் (Ships article, contract agreement போன்றவை) பற்றி அறிந்து வைத்திருத்தல். ஏற்கனவே கப்பலில் சென்று வந்தவர்களிடம் இது பற்றி அறிந்து கொள்ளலாம்.

✦ G.C.E தராதரம் இல்லாதவர்கள் கப்பலுக்கு சேருவதற்கு நிற்கும் காலத்தில் பிரத்தியேகமாக G.C.E தராதரம் பெற முயற்சித்தல். இது தொழில் வாய்ப்பை மேலும் அதிகரிக்கும்.

Spoken English கற்றல். அல்லது Spoken English பழகுவதற்காக office களில் temporary வேலையில் சேருதல். ஏதாவது shipping கம்பனிகளில் அல்லது crew agent இன் office இல் வேலை செய்வது மிகமிக நன்மை பயக்கும்.

ந.சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்
வல்வை. மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

✦ கப்பல் கல்விக்குத் தேவையான பாடத்திட்டங்களை அறிதல், அவற்றிற்குத் தேவையான பாடப் புத்தகங்களை வாங்க முயற்சித்தல். அவற்றைப் படித்தல். அநேகமான Nautical & Engineering college களில் படிப்பதற்கு அதிக செலவாகும். ஏற்கனவே படித்து வைப்பதன்மூலம் முதல் முறையிலேயே சித்திபெற்று செலவைக் கட்டுப்படுத்தலாம்.

✦ பாடத்திட்ட முறைகளை அறிந்து Syllabus) Maths, Science ஆகிய பாடங்களையும் முடியுமாயின் ஏனைய nautical பாடங்களையும் படித்தல். கப்பலில் சென்று வந்தவர்களுடன் சேர்ந்து படிக்கலாம். கப்பலில் officer ஆக வேலை செய்தவர்களிடம் ஆலோசனைகள் அல் லது உதவிகள் பெற்று படிக்கலாம். (முற்றும்)

# 80 ஆயிரம் குடிசன மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு பயிற்சிகள்

(கொழும்பு)

இந்த ஆண்டில் இடம்பெறும் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைளுக்குரிய மதிப்பீட்டு அதிகாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 80 ஆயிரம் அதிகாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.ஆர்.குணசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கான பயிற்சிகள் பிரதேச மட்டத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குடிசன மதிப்பீட்டிற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளும் படிவத்தை நிரப்பும் நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறும் என அவர் தெரிவித்தார்.

மேலும் நாடு முழுவதிலுமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டு தகவல்களில் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கூறினார்.

அத்துடன் கணனி உபயோகம், இணையத்தள பாவனை மற்றும் தொலைத்தொடர்பு உபகரண பாவனை குறித்த தகவல்களும் இம்முறை மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டதாக குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-2)

# எண்பது ஆடுகளை கடத்திய கும்பல்

சட்டவிரோத ஆடுகளை ஏற்றி வந்து அதனை வெட்டிய நான்கு சந்தேக நபர்களை கொழும்பு கோட்டை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவித்தியாலய மாவத்தையிலுள்ள 36 ஆவது இலக்க தோட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அனுமதிப்பத்திரங்கள் இன்றி பெருந்தொகையான ஆடுகள் கொண்டு வரப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களை அடுத்து கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவொன்று சம்பந்தப்பட்ட பிரதேசத்திற்கு விரைந்து சென்று முற்றுகையிட்டதுடன் வெட்டப்பட்டிருந்த 16 ஆடுகளின் 243 கிலோ எடையுள்ள ஆட்டிறைச்சிகளையும் மீட்டெடுத்துள்ளதுடன் வெட்டுவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 64 ஆடுகளையும் விடுவித்துள்ளனர். (அ-2)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை கோரினால் பிரச்சினை ஏற்படும்

## கருணா எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதல்வர் சந்திரகாந்தன் , மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை என்று முன்வைத்துள்ள கோரிக்கை அவருக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோருவது போன்று காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசாங்கம் ஒருபோதும் மாகாணங்களுக்கு வழங்காது என பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் எதற்குத் தேவைப்படுகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் வாக்குகளைக் குறிவைத்தே இவ்வாறு கோரிக்கைகளை விடுக்கின்றனர்.

கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் கூட காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை என்று கோரியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டே அதனுடன் முரண்பட்டால் அது சந்திரகாந்தனுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (அ-2)

## பதிவாகாத சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களே அதிகரித்துள்ளன

நாட்டில் நாளாந்தம் 7 தொடக்கம் 9 வரையான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகாமல் காணப்படுவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பதிவாகின்ற சம்பவங்களை விட பதிவாகாத சம்பவங்கள் இடம் பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹன தெரிவித்துள்ளார்.

பதிவாகின்ற முறைப்பாடுகள் குறித்து கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

குறிப்பாக தனிமையில் இருக்கின்ற மற்றும் பெற்றோர் தொழில்களுக்கு செல்கின்ற பிள்ளைகளே பெரும்பாலும் இந்த நிலைமைக்கு ஆளாக நேரிடுவதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

## மருந்தகங்களின் தரத்தை பரிசோதிக்க எட்டு விசேட அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

மருந்தகங்களின் தரத்தினைப் பரிசோதிக்கும் நடவடிக்கையினை கண்காணிப்பதற்கு எட்டு விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அதிகாரிகள் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் செயற்படவுள்ளதாக வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம குறிப்பிட்டுள்ளார். மருந்தகங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையினை வலுப்படுத்த இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதிகளவிலான அதிகாரிகளை ஈடுபடுத்தி அவர்களுக்கு மேலதிக அதிகாரத்தினை வழங்குவதன் மூலம் இலக்கினை இலகுவாக வெற்றி கொள்ள முடியும் என வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் மேலும் கூறினார். (அ-2)

## கிராமசேவகர் பதவிக்கு புதிதாக 2000 பேர்

கிராமசேவகர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 2 ஆயிரம் கிராமசேவக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார். அதற்கான விண்ணப்பங்கள் இன்னும் சில தினங்களில் கோரப்படவுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கிழக்கு மாகாண சபையினரின் தீர்மானத்தை வரவேற்கின்றோம்

## அரசின் கவனத்துக்கு கொண்டு வாருங்கள் என்கிறார் சுரேஷ்

மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டுமென கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பு அளித்துள்ளது.

கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் தலைமையிலான கிழக்கு மாகாணசபையில் அண்மையில் இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி காணி, பொலிஸ் அதிகாரங்களை கோரும் கிழக்கு முதல்வர் சந்திரகாந்தனின் நகர்வுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது. எனினும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான எமது கோரிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து புறக்கணிக்குமேயானால் மோசமான விடயங்கள் நடக்கும்.

தமிழர் பிரச்சினைக்கு இதுவரையில் எந்தப் பதிலையும் அரசாங்கம் வழங்கவில்லை. தமிழர்களின் விருப்பங்களுக்கு மாறான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது.

அவர்கள் கிழக்கு மாகாண சபையின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஒரு மனதாக அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் மத்திய அரசு உடனடியாக அது பற்றி கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு மட்டுமின்றி அனைத்துலக சமூகத்துக்கும்கூட தெளிவான செய்தியை சொல்லியுள்ளது.

கிழக்கு முதல்வர் சந்திரகாந்தனுடன் எப்போது பேச்சு நடத்துவது என்று இன்னமும் நாள் குறிக்கப்படவில்லை.

ஆனால் அடுத்தவாரம் நாடாளுமன்ற அமர்வின் போது இது தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கையை பாதுகாத்து வருகிறோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சென்று தாய்நாட்டை காட்டிக்கொடுப்பதற்காக ஒருசிலர் முயற்சிகளை மேற்கொள்கின்ற போதிலும் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் சுதந்திர இலங்கையை பாதுகாப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவை நீர்வழங்கல் திட்டத்தை மக்களுக்காக திறந்து வைக்கும் பொருட்டு கல்லேல்ல நீர் வழங்கல் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்தக் கருத்தினைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உருவாகியுள்ள அமைதி சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு, மேற்கு, தெற்கு, மலையகம் என்ற ரீதியில் பிரிந்து செல்லாது இலங்கையர் என ஒன்றிணைந்து இன்று மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

30 வருடங்களாக அபிவிருத்தியைக் காணாத பிரதேசங்கள் கூட அபிவிருத்தி செய்யப்பட்டு நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் அபிவிருத்தியை மேற்கொள்ளும் செயற்திட்டங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அரசியல் பேதங்களை புறந்தள்ளி அனைவரும் ஒன்றாக கைகோர்த்து முன்னோக்கி பயணிக்கின்ற காலம் மலர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)





மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலை அதிபர் எஸ். சிவனேஸ்வரன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் போட்டியில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: உ.சாளின்)

# ஐந்து வகையான தானியங்களின் இறக்குமதிக்கு தடைவிதிக்க முடிவு

## அந்நிய செலாவணியை சேமிக்க முடியும் என்கிறது விவசாய அமைச்சு

(கொழும்பு)

ஐந்து வகையான தானியங்கள் இறக்குமதி செய்யப்படுவதை இந்த வருடம் முதல் நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் பெருந்தொகை அந்நிய செலாவணியை சேமிக்க முடியும். அத்தோடு குரக்கன், உழுந்து, எள்ளு, சோளம், நிலக்கடலை ஆகிய ஐந்து வகையான தானியங்களின் இறக்குமதியை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் டபிள்யூ. ஏ.சகலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பயிர் வகைகளின் உற்பத்தியை தேசிய ரீதியில் உயர்த்துவதற்கு தேவையான பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சோளப் பயிர்ச்செய்கை உயர்வடைந்துள்ளதாகவும் உற்பத்தி அதிகரிப்பின் பின்னர் வரியை அதிகரித்து இறக்குமதியை நிறுவத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என டபிள்யூ.ஏ.சகலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான புதிய பயிர்நிலங்களை உருவாக்குதல், இடைக்கால அறுவடை முறையை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் கோதுமை மற்றும் தானிய வகைகளின் இறக்குமதிக்காக 29 ஆயிரத்து 120 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளதாக 2010 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் மொத்த இறக்குமதியில் நூற்றுக்குஒன்று தசம் ஒன்பது வீதமாகும்.

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தினூடாக நிலக்கடலை மற்றும் உழுந்து ஆகிய தானியங்களுக்கே அதிக பாதிப்பு ஏற்படுவதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் மற்றும் வர்த்தக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தானிய வகைகளுக்கான இறக்குமதி நிறுத்தப்படுவதற்கு முன்னர் அவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறில்லாத பட்சத்தில் விலை அதிகரிப்பு காரணமாக சிறுகைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (அ-2)

## தங்கவேலி திறந்துவைப்பு

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க சோமாவதி புண்ணிய பூமியில் அரச மரத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள தங்கவேலி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் சமய அனுட்டானங்களுடன் நேற்று முன்தினம் சுபவேளையில் ஜனாதிபதி தங்கவேலியை திறந்து வைத்தார்.

இந்தத்தங்கவேலியை அமைப்பதற்காக 30 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தங்கவேலியைத் திறந்து வைத்த ஜனாதிபதி பின்னர் சோமாவதி தூபியையும் தரிசித்தார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 26



கிரீட் தீவில் பராசூட் மூலம் தரை இறக்கப்படும் ஜேர்மனியத்துருப்புக்கள்

கிரீஸ் பரப்பிலும் பாசிச ஜேர்மனித் துருப்புக்களின் முன்னேற்றம் விரைவாக வளர்ந்து வந்தது. இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய நான்காம் நாளே ஹிட்லர் துருப்புகள் சலோனிக்கியைக் கைப்பற்றின. "கிழக்கு மாசிடோனியா என்ற கிரீஸ் இராணுவம் சரணடைந்தது. பாசிச ஜேர்மனியத் துருப்புகள் தெற்கு நோக்கி மேற்கொண்டு முன்னேறியதானது கிரீஸ் துருப்புக்களில் பெரும்பகுதி சுற்றிவளைக்கப்படும் அபாயத்தை ஏற்படுத்தியது. ஏப்ரல் 12 ஆம் திகதி கிரீஸ் படைத்தலைமை அல்பேனியாவிலிருந்து நாட்டின் உட்புறம் நோக்கி தன் துருப்புக்களை பின்வாங்க ஆரம்பித்தது. இத்தாலியத் துருப்புக்கள் இவற்றைத் துரத்திச் சென்றன. ஏப்ரல் 23 ஆம் திகதி கிரீஸ் இராணுவத்தின் சரணடைவைப் பற்றிய உடன்படிக்கை கையெழுத்தானது. ஏப்ரல் 27 ஆம் திகதி பாசிச ஜேர்மனித் துருப்புகள் ஏதென்சில் நுழைந்தன. சுமாராக 12ஆயிரம் பேர்களைப் பறிகொடுத்த பிரிட்டிஷ், பயணப்படை கோர்பஸ், கிரீட் தீவிற்கு வெளியேற்றப்பட்டது. இது தன் கனரக ஆயுதங்களையும் போக்குவரத்து சாதனங் களையும் அப்படியே விட்டு விட்டு சென்றது.

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



கிரீட்தீவில் ஜேர்மனி துருப்புகளிடம் சரணடையும் பிரிட்டிஷ் துருப்புகள்

ஜேர்மனியர்களின் கீரீட் வான் இறக்குப் படை நடவடிக்கைதான் பால்கன் நடவடிக்கையின் இறுதிக் கட்டமாக இருந்தது. இது இரண்டாம் உலக யுத்தத்திலேயே மிகப் பெரும் வான் இறக்குப்படை நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியிலும் ஏசியன் கடலிலும் ஆதிக்கத்தை வெல்வதற்கான பெரும் போர்த்தந்திர முக்கியத்துவம் உடைய தீவை கைப்பற்றுவது தான் இந்நடவடிக்கையின் நோக்கமாகும். இதன்படி முன்னணி வான் இறக்குப் படைகளைக் கொண்டு தீவிலுள்ள 3 விமானத் தளங்களை க்கைப் பற்றி பின்னால், இவற்றில் முக்கிய சக்திகளை இறக்கத் திட்டமிட்டது. அதே நேரத்தில் கடல் இறக்குப் படையை இறக்கவும் திட்டமிடப்பட்டது.

சக்திகளின் சமநிலை பாசிச ஜேர்மனியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. இவற்றின் வசம் 7-வது வான் இறக்குப்படை டிவிசனும் 5-வது மலையேற்றப்படை டிவிசனும் தனிப்பட்ட படைப்பிரிவுகளும்- மொத்தமாக 22 ஆயிரம் நபர்கள்- 433 குண்டு வீச்சு விமானங்ளும் 233 சண்டை விமானங்களும் 500 போக்குவரத்து விமானங்களும் 50 வேவு விமானங்களும் 72 சரக்கு கிளைடர்களும் இருந்தன.

கடல் இறக்குப்படையில் சுமார் 7000 பேர்களும் 70 கப்பல்களும் இருந்தன.

**வி.அ.மத்சுலேன்கோ**

சுமார் 30 ஆயிரம் நபர்கள் இருந்த தீவின் பிரிட்டிஷ் பாதுகாப்பு சக்திகளும் கிட்டத்தட்ட 14 ஆயிரம் கிரீஸ் போர் வீரர்களும் பாசிச ஜேர்மனித் துருப்புகளை எதிர்த்தனர். தற்காப்பில் ஈடுபட்டிருந்த துருப்புகளிடம் போதுமான ஆயுதத்தளபாடங்கள் இருக்கவில்லை: பீரங்கிகள் போதவில்லை, விமானப் படை இல்லாதிருந்தது, மொத்தம் 6 டாங்கிகள்தான் இருந்தன. பிரிட்டிஷ் படைத்தலைமை கடற்படையின் வான் எதிர்ப்பு தற்காப்பின் மீது முக்கிய கவனத்தைத் செலுத்தியது. (தீவில் 4 போர்க் கப்பலும் 1 விமானந்தாங்கி கப்பலும் 9 குருசர்களும் 20- க்கும் அதிகமான நாசகாரி கப்பல்களும் இருந்தன)



கடற்ல சிங்கம் நடவடிக்கைக்காக ஜேர்மன் ஒத்திகை பார்க்கும் ஒரு பான்சர்-3 இரக நீர்,நிலத்திலும் செயற்படும் டாங்கி

குறிப்பிட்ட நாளன்று, அதாவது,

ஜோமன் துருப்புகள் கிரீஸ் இற்குப் புறப்படுவதற்கு முன்



### பிரான்ஸின் சரணடைவிற்குப்பின் பிரிட்டன் மீதான தாக்குதல் ஆரம்பம்

மே 20-ஆம் திகதி காலை பெரும் விமானப்படையின் பூர்வாங்கத் தாக்குதலுக்குப்பின் மலேம்யே, ஹான்யா, ரெட்டிம்னோன், இராக்ளினோன் ஆகிய விமானத் தளங்களிலும் ஹான்யா நகரிலும் ஜேர்மனிய பாரசூட் வீரர்கள் இறக்கப்பட்டனர். இவர்களால் பேரிழப்பிற்குபின் மலேம்யேவிலும் ஹான்யாவிலும் மட்டுமே நிலைத்து நிற்க முடிந்தது. இரண்டாம் நாள் பூராவும் 5-வது மலையேற்றப்படை டிவிசன் பிரிவுகளை ஏற்றிக் கொண்டு விமானங்களும் கிளைடர்களும் இங்கு வரலாயின. அதே நேரத்தில் ஜேர்மனியப்படைத் தலைமை கடல் வழியே இறக்குப்படையைத் தரையிறக்க முயன்றது. ஆனால், இதை பிரிட்டிஷ் கடற்படை கண்டுபிடித்து கிட்டத்தட்ட முற்றிலுமாக அழித்தது.



சரணடைந்த கிரீட் இராணுவத்துடன் ஜேமன் துருப்புகள் சந்திப்பை மேற்கொண்டபொழுது

பேரிழப்பிற்குப்பின் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் ஜூன் 1 ஆம் திகதி தீவைப் பிடித்தன. சுமார் 4000 பேர் கொல்லப்பட்டனர் அல்லது தொலைந்து போயினர். 2100 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். 220 விமானங்களும் கணிசமான அளவு கப்பல்களும் இழப்பிற்குள்ளாயின. பாரசூட் வீரர்களையும் விமானங்களையும் பெருமளவில் இழந்ததானது ஜேர்மனிய உயர்மட்டப் படைத் தலைமையை பயமுறுத்தியதால் இது மேற்கொண்டு பெரிய வான் இறக்குப் படைநடவடிக்கைகளை நடத்துவதைக் கைவிட்டது.

ஆங்கிலேயர்கள் கிரீட்டில் நடந்த சண்டைகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை பறிகொடுத்தனர்; இவர்களில் 1742 பேர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் கெய்ரோவிற்கு அகற்றப்பட்டனர். கடற்படைக்கும் பேரிழப்பு ஏற்பட்டது: 3குரூசர்களும் 6 கண்ணிவெடிக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன; 1 விமானந்தாங்கிக் கப்பல், 3போர்க் கப்பல்கள், 6 குரூசர்கள், 7கண்ணி வெடிக்கப்பல்கள் உட்பட பல கப்பல்களும் சேதமடைந்தன. கிரீஸ் ஒருசண்டைக் கப்பலையும் 12 நாசகாரிக் கப்பல்களையும் 10டர்பேடோபடகுகளையும் 75 சதவிகிதம் வரை தனது வர்த்தக கப்பல்களையும் பறிகொடுத்தது. கிரீட் தீவுகளில் இருந்த கிரீஸ் துருப்புக்களுக்கும் கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டன. 15 ஆயிரம் பேர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், சிறைப்பிடிக்கப்பட்டனர்.

ஹிட்லரின் படைத்தலைமை முன்வைத்த நோக்கங்கள் அடையப்பட்டன. இதில் பாசிச ஜேர்மனிய விமானப்படை தீர்மானகரமான பங்காற்றியது. இது விண்ணில் ஆதிக்கத்தை வென்று பிரிட்டிஷ் கடற்படைக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

கிரீட் தீவைக் கைப்பற்றியதானது, சோவியத் யூனியனின் மீதுபடை யெடுப்பதற்கு தயாராகி வந்த தனது துருப்புக்களின் வலதுபுறத்திற்கு நம்பகரமாக வகை செய்த பாசிச ஜேர்மனிக்கு உதவியது. மேலும் ஏசியன் கடலிலும் மத்திய தரைக்கடலிலும் உள்ள கடற்பாதைகளின் மீது கண்காணிப்பு நிலைநாட்டப்பட்டது, கிரேட் பிரிட்டனோ மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் மிகமுக்கிய ஆதாரத்தளங்களில் ஒன்றை இழந்தது.

(தொடரும்)

# தமிழ்க்கைதிகளை பொதுமன்னிப்பில் விடுதலை செய்வதே காலத்தின் தேவை

## மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி

(கொழும்பு)

தமிழ் அரசியல்கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதே அரசியல் கைதிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தின் முன்னுள்ள பொறுப்பாகும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைச் சிறைச்சாலைகளில் தவித்துக் கொண்டிருக்கும் மலையக மற்றும் வடக்குக் கிழக்கு இளைஞர்களின் நிலைமைகள் தொடர்பில் மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் பிள்ளைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்கள் விடுதலை துரிதப்படுத்தப்படும் என நம்பியிருந்தோம்.

ஆயினும் இன்றைய நிலையில் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்களோ திட்டங்களோ அரசாங்கத்திடம் இல்லை என்பதை வெளிப்படையாக தெரிந்து கொள்கின்றோம்.

சிறைகளில் வீணாக இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் அதன் தாக்கம் என்பது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மாறாகதடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தினை கூட பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்.

அத்துடன் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் வீட்டில் இருந்து ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் மனித உரிமைகள் கூட பேணப்படவில்லை.

இவ்வாறாக அரசியல் கைதிகளின் மீதான வன்முறைகள் சகஜமாகவே இடம்பெற்று வருகின்றன. இதற்கான தக்க சான்றுகளாக அண்மையில் சிறைச்சாலையில் இடம்பெற்ற அப்பட்டமான வன்முறைகளைக் குறிப்பிட முடியும்.

சிறைகளில் தேவையற்ற விதமாக தமிழ் இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்து அவர்களை வன்முறைகளில் இருந்து கூட காப்பாற்ற முடியாத நிலையில் அரசாங்கம் இன்று உள்ளது.

எனவே காரணம் இன்றித் தடுத்து வைத்திருக்கின்ற தமிழ்மக்களின் அப்பாவிப் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை மக்கள் பிரதிநிதி என்ற வகையில் ஊடகங்களின் வாயிலாக அரசாங்கத்திடம் முன்வைக்கின்றேன்.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவடைந்துள்ளது என்ற யதார்த்த நிலைமையினை ஏற்றுக்கொண்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் அரசியல் சிறைக்கைதிகளை விடுதலை செய்ய அரசியல் தலைமைகள் மற்றும் இலங்கையின் அரசாங்க அதிகாரிகள் என சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஆணைக்குழுவின் அறிக்கையில் அடிப்படையற்ற குற்றச்சாட்டு

### பெல்ஜியத்துக்கான தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற போர்க்குற்ற சம்பவங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது என இலங்கையின் பெல்ஜியத்துக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற சம்பவங்களும் பரிந்துரைகளும் இடம்பெற்றுள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளர். அடிப்படையற்ற வகையில் இது தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கை மிகவும் நியாயமான ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அதன்போது எவராவது பிழையாக செயற்பட்டிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அரசின் நிலைப்பாடு என்ன?

### சுமந்திரன் எம்.பி. கேள்வி

(கொழும்பு)

அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளியிடப்படும் வரையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்வைக்கப்பட வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை தாண்டிய தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்படும் என ஜனாதிபதி இந்தியாவிடம் வாக்குறுதி அளித்துள்ளார். இந்த வாக்குறுதியை மக்களுக்கும் அரசாங்கம் அளிக்க வேண்டும்.

அவ்வாறு உறுதிமொழி அளித்தால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க முடியும். பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன் வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித பதிலையும் அளிக்காத நிலையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில் அர்த்தமில்லை.

இந்தியாவிடம் அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படுமானால் அதனை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஐ.தே. கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிபு

பிரித்தரானியாவில் இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பில் பின்பற்றப்படும் ஒழுக்கவிதிகள் இலங்கையிலும் அமுல்படுத்த வேண்டும். மஹாராஜா ஊடக நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதனால் பிரித்தானியாவில் இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பில் பின்பற்றப்படும் ஒழுக்கவிதிகள் இலங்கையிலும் அமுல்படுத்தப்பட வேண்டுமென ரணில் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர். குறித்த ஊடக நிறுவனம் ரணில் தரப்பினருக்கு அசௌகரியம் ஏற்படும் வகையிலான தகவல்களை வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக்குழுவினர் ஊடக நிறுவனங்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை கட்சியின் தலைமையகம் சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும் அடிமட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பிலும் செயற்குழுக்கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (அ-2)

## மட்டக்களப்பில் திருட்டுச் சம்பவம்


(கொழும்பு)

மட்டக்களப்பு நகரை அண்மித்த பூம்புகார்ப்பகுதியில் நேற்று முன்தினம் பகல் வேளையில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்தவீட்டில் எவரும் இல்லாத நிலையில் வீட்டின் யன்னலை உடைத்து 2 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா பெறுமதியான நகையும் 3 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

குறித்த கொள்ளையினைப் பிடிப்பதற்கு மட்டக்களப்புப் பொலிஸ் நிலைய குற்றப்புலன் விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மோப்பநாயுடன் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)







கீரிமலை சிவபூமி மடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை நிலையத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையுரையாற்றுவதையும் கீரிமலை சிவபூமி மடத்தை ஹவாய் சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நாடாவெட்டி மடத்தை திறந்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# சீனா திருப்பியளித்த காணிக்கு முற்பணம் செலுத்திய இந்தியா

(கொழும்பு)

கொழும்பில் மிகவும் ஆடம்பர ஹோட்டலை நிர்மாணிக்கும் முகமாக காணியொன்றுக்கு இந்தியாவின் ஐடிசி குழுமம் இலங்கை அரசாங்கத்துக்கு முற்பணத்தை செலுத்தியுள்ளது.

கொழும்பு காலி முகத்திடலில் அமையவுள்ள இந்த ஹோட்டலுக்காக 50 வீத கொடுப்பனவான 73.5 மில்லியன் டொலர்களை இந்திய நிறுவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் 300 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் இந்த ஹோட்டல் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தக் காணியை சீனாவின் சி.ஏ.டி.ஐ.சி. நிறுவனம் கொள்வனது செய்த போதும் காணி விற்பனை தொடர்பான கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்பட்டமையால் இலங்கை அரசாங்கம் முற்பணக் கொடுப்பனவை சீன நிறுவனத்துக்கு திருப்பியளித்தது.

இந்தக் காணி ஏற்கனவே ஹொங்கொங்கின் சங்க்ரி லா குழுமம் ஹோட்டல் அமைப்புக்காக காலி முதத்திடலில் கொள்வனவு செய்துள்ள காணியை ஒட்டிய வகையில் அமைந்துள்ளது. (அ-2)

# வடக்குக் கிழக்கில் அதிககுளிர்; நோய்தொற்றுக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கில் தற்போது கடுங்குளிர் காலநிலை நிலவி வருகின்றது. இந்தியாவில் நிலவி வரும் கடும் காற்றுடன் கூடிய குளிர் காலநிலை வடக்கில் நேரடியாக தாக்கம் செலுத்தி வருவதாக வானிலை அவதான நிலையத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி முதல் வடக்கில் வெப்பநிலை மாறுபட்டளவில் குறைவடைந்து வருவதாகவும் இதனால் அப்பகுதியெங்கிலும் பனிமூட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கின் பிரதிபலிப்பாக கிழக்கு மாகாணத்திலும் வெப்ப நிலை ஓரளவு வீழ்ச்சியடைந்திருப்பதன் விளைவாக குளிர்கால நிலை நிலவி வருவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

கிழக்கில் அதிகரித்த பனி காரணமாக மக்கள் நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். திடீர் காலநிலை மாற்றத்தையடுத்து காய்ச்சல், இருமல், தடிமன் போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. உதடு மற்றும் குதிகால் வெடிப்பு நோய்களுக்கும் மக்கள் ஆளாகி வருகின்றனர். குறித்த காலநிலையே இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இரவிலும் பகலிலும் பனி தொடருவதனால் சிறுவர்களும் முதியவர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குளிர்காரணமாக பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குளிர்கால நிலையையடுத்து வேளாண்மையும் நோய்த் தொற்றுக்குள்ளாகி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதிகமான பிரதேச நெற்காணிகள் இலை சுருட்டி நோயின் தாக்கத்திற்குள்ளாகி வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-2)

# தமிழக மீனவர் பிரச்சினையை தீர்க்க ஒன்றுபடுங்கள்- வீரமணி

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது தொடர்பில் ஒரே குரலில் ஒரே அணியில் ஒன்றுபட்டால் தீர்வு கிடைக்கும் என திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழ்நாட்டு மீனவ சகோதரர்களின் வாழ்வாதாரம் மீன்பிடித் தொழிலிலேதான் உள்ளது. அத்தொழிலைத் தவிர அவர்களுக்கு வேறு தொழில் ஏதும் தெரியவே தெரியாது.

இந்நிலையில் தங்கள் வாழ்க்கையை அன்றாடம் ஆபத்துக்கு உரியதாகவும் இயற்கையின் கொடுமைகளால் பாதிக்கப்படக் கூடியதாகவும் இருந்தும் துணிந்து அவர்கள் கடல் மேல் வாழ்கின்றார்கள்.

அத்தகைய மீனவர்களுக்கு இலங்கை அரசாங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் கொடுக்கும் தொல்லைகள் எழுதி முடியாத ஒன்று.

ஏடுகளை எடுத்தால், ஊடகங்களைப் பார்த்தால், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது, சிங்களவர்கள் தாக்குதல், சிறைப் பிடித்தல் இப்படித்தான் அன்றாட அவலங்கள். மத்தியில் உள்ள டில்லி அரசோ கவலைப்படுகின்றோம் என்ற பல்லவியையே மாறி மாறிப் பாடிக் கொண்டிருக்கின்றது. தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் இணைந்து ஒன்றுபட்டு ஒரு அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டி அதில் குறுக்குசால் ஓட்டப் படாத ஒருமித்த தீர்மானம், முடிவு ஏற்பட வேண்டும்.

அனைவரும் ஒரே குரலில் ஒரே அணியில் மனிதாபிமானமற்ற முறையில் மீனவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், திட்டமிட்டே இலங்கையில் சிறைப்பிடித்து வைத்தல், மீன் வலைகளைப் பறிமுதல் செய்வது, படகுகளை இழுத்துச் செல்லுதல் போன்றவைகளுக்கு தடுப்பு முறைகளை உருவாக்க நாம் மத்திய அரசை வற்புறுத்திட வேண்டும்.

ஒன்றுபட்டால் உண்டு தீர்வு. இன்றேல் இந்த அவலங்கள் நீங்காதவைகளாகி விடக் கூடும் என அவர் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




★ 1606-இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்சிற்கு எதிராகவும் நாடாளுமன்றத்திற்கெதிராகவும் சதி முயற்சியில் இறங்கியமைக்காக காய்ஃபோக்ஸ் என்பவன் தூக்கிலிடப்பட்டான்.

★ 1747-பால்வினை நோய்களுக்கான முதலாவது மருத்துவ நிலையம் லண்டனில் லொக் மருத்துவமனையில் நிறுவப்பட்டது.

★ 1876-அனைத்து இந்தியப் பழங்குடிகளும் அவர்களுக்கென அமைக்கப்பட்ட சிறப்பு இடங்களுக்கு செல்லுமாறு ஐக்கிய அமெரிக்க அரசு உத்தர விட்டது.

★ 1915-முதலாம் உலகப் போர்: ஜேர்மனி ரஷ்யாவுக்கெதிராக நச்சு வாயுவைப் பயன்படுத்தியது.

★ 1928-லியோன் ட்ரொட்ஸ்கி கசகஸ்தானுக்கு நாடு கடத்தப்பட்டார்.

★ 1937-சோவியத் ஒன்றியத்தில் 31 த்ரொட்ஸ்கி ஆதரவாளர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் ஜப்பான் வசமிருந்த மார்ஷல் தீவுகளில் தரையிறங்கின.

★ 1946-யூகொஸ்லாவியாவில் சோவியத் முறையிலான அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டு நாடு பொஸ்னியா எர்செகோவினா, குரொவேஷியா, மக்கெடோனியா, மொண்டெனேகுரோ, சேர்பியா மற்றும் சிலவேனியா என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

★ 1953-வடகடல் பெருக்கெடுத்ததன் விளைவாக நெதர்லாந்தில் ஆயிரத்து 800 பேர் உயிரிழந்தனர்.

★ 1958-ஐக்கிய அமெரிக்காவின் வெற்றிகரமான முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1961- நாசாவின் மேர்க்குரி- ரெட்ஸ்டோன் 2 விண்கலம் ஹாம் என்ற சிம்பன்சி ஒன்றை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

★ 1968-வியட்நாம் போர்: வியட் கொங் படைகள் சாய்கொன் நகரில் அமெரிக்க தூதராலயத்தைத் தாக்கின.

★ 1968-நவூறு (Nauru) அவுஸ்திரேலியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1980-குவாத்தமாலாவில் ஸ்பெயின் தூதராலய முற்றுகையில் 39 பேர் உயிருடம் தீயிட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1990-சோவியத் ஒன்றியத்தில் முதலாவது மாக்டொனால்ட் உணவகம் மொஸ்கோவில் திறக்கப்பட்டது.

★ 2003-அவுஸ்திரேலியா, நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் வோட்டர்ஃபோல் என்ற இடத்தில் தொடரூந்து ஒன்று தடம் புரண்டதில் சாரதி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1762-லக்லான் மக்குவாரி, காலனித்துவ நிர்வாகி (இ.1824)

★ 1797-பிரான்ஸ் சூபேர்ட், ஆஸ்திரிய இசையமைப்பாளர் (இ.1828)

★ 1881-ஏர்விங் லாங்முயர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1957)

★ 1902-ஆல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்றவர் (இ.1986)

★ 1929-ருடொல்ஃப் மொஸ்பாவர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர்

★ 1935-கென்சாபுரோ ஓயீ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர்

### இறப்புக்கள்

★ 1580-கர்தினால் ஹென்றி, போர்த்துக்கல் இலங்கை மன்னன் (பி.1512)

★ 1955-ஜோன் மொட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1865)

★ 1973-ராக்னர் ஆண்டன் ஃபிரீஷ், நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)

★ 1987-எம். பக்தவத்சலம் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (பி.1897)

★ 2009-நாகேஷ், நகைச்சுவை நடிகர் (பி.1933)

### சிறப்பு நாள்

★ நவூறு- விடுதலை தினம் (1968)



★ 1933- ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (பி.1867)

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இலங்கைக்கு சாதகமா...? பாதகமா...?



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் பற்றிய செய்திகள் ஊடகங்களில் மீண்டும் பரபரப்பாகத் தொடங்கியுள்ளன.

இதற்கு முன்னரும் பலமுறை ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்கள் தொடர்பாக பரபரப்பாக செய்திகள் வெளியாவதுண்டு.

குறிப்பாக 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், இது ஒரு வழக்கமான விவகாரமாகிவிட்டது.

ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பிக்க சில வாரங்கள் முன்னதாகவே தொற்றிக் கொள்ளும் இந்தக்காய்ச்சல், அது முடிவுக்கு வரும்வரை விடாமல் அடித்துக் கொண்டேயிருக்கும்.

இப்போதும் அப்படித்தான், இந்தக் கூட்டத்தொடர் ஆரம் பிக்க இன்னும் கிட்டத்தட்ட 4 வாரங்கள் இருக்கின்ற போதும் அதையொட்டிய பரபரப்புக்கு குறைவேதும் இல்லாமல் கிளம்பி விட்டது.

பெப்ரவரி 27 தொடங்கி மார்ச் 23 வரை நடக்கப்போகும் இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் பற்றிய விவாதம் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

இதற்கு முன்னரும் பலமுறை ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கம் நெருக்கடியை சந்திக்கப்போகிறது என்று தகவல்கள் வெளியாகின. ஆனால், அத்தகைய சூழல்களில் இருந்து இம்முறை, சற்று வித்தியாசமானது.

இதற்கு முன்னர் ஜெனிவா கூட்டத் தொடரில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் குறித்த சர்ச்சைகள், விவாதங்கள் எழுந்த போதெல்லாம், அதனை அரசாங்கம் உள்நாட்டு பொறிமுறை மூலம் தீர்க்கப்போவதாகக் கூறி வந்தது.

அதாவது நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகள் நடத்தப் படுகிறது, அந்த அறிக்கை வெளியாகும் வரை, பொறுத்திருக்குமாறு அரசாங்கம் சமாதானம் கூறியது. ஆனால், இப்போது அந்த சாதகமான நிலைமை அரசுக்கு இல்லை.

அப்போது அரசாங்கம் வைத்து விளையாடிய பந்து இப்போது சர்வதேச சமூகத்தினது கையில், குறிப்பாக மேற்குலகின் கையில் சிக்கியுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அடுத்து வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் விவாதிக்க மேற்குலகம் விரும்புகிறது. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் இலங்கை தொடர்பாக மற்றொரு அறிக்கையும் உள்ளது.

கடந்த கூட்டத் தொடரின் போர்து ஐ.நா பொதுச்செயலாலர் பான்கீ மூன் அனுப்பி வைத்த நிபுணர் குழுவின் அறிக்கையே அது.

அது பற்றி இன்னமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை எந்த



முடிவுக்கும் வராத நிலையில்தான் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பற்றிய விவாதத்துக்கு மேற்குநாடுகள் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே கடந்த ஆண்டு இறுதியில் நடந்த கூட்டத் தொடரில், இந்த அறிக்கை வெளியிடப்பட முன்னரே அதனை சமர்ப்பிக்குமாறு அமெரிக்கா கோரியிருந்தது. ஆனால், அதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

தாங்கள் முதலில் அறிக்கையைப் படித்த பின்னரே அதனை பகிரங்கப்படுத்துவோம் என்று அடித்துக் கூறிவிட்டது அரசாங்கம்.

ஆனால், இப்போது அறிக்கை வெளிவந்துவிட்டது. இதனால், அந்த அறிக்கையை ஜெனிவா கூட்டத்தில் சமர்பிக்க கோருகிறது மேற்குலகம்.

ஆனால், இலங்கை அரசாங்கமோ அதனை ஜெனிவா மாநாட்டில் விவாதத்தில் சேர்த்துக் கொள்ளத்தயாராக இல்லை.

அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் போது, அதிலுள்ள குறைபாடுகள் குறித்து ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளும் பிய்த்தெறிந்து ஆராய்வர். அது இலங்கைக்குச் சாதகமற்ற நிலையை ஏற்படுத்தும்.

ஆனால், மேற்கு நாடுகள் ஒன்றும் அவ்வளவு சுலபத்தில் இந்த விடயத்தை கைவிடுவதாக இல்லை. அப்படி இந்த அறிக்கை ஜெனிவாவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், ஏற்கனவே மனித உரிமைகள் பேரவையில் உள்ள ஐ.நா நிபுணர் குழு அறிக்கையையும் அது கூடவே சந்திக்கு இழுத்து வந்து விடும்.

அதுதான் அரசாங்கத்துக்கு மிகவும் ஆபத்தான விடயம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைீ வரவேற்றுள்ள மேற்குலகநாடுகள், குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக போதியளவு பதிலளிக்கப்படவில்லை என்று அடித்துக்கூறிவிட்டன.

பொறுப்புக் கூறுதல்தான் இலங்கைக்குப் பெரிய தலை வலியான விடயமாக இருந்து வருகிறது.

அதுதான் மனித உரிமைகள் பேரவையிலும் முக்கியமாக அலசப்படும்.

எனவே நல்லிணக்க நடவடிக்கை சார்ந்து எதை எடுத்துக் கூறி னாலும், எதைச் செய்தாலும், பொறுப்புக் கூறும் விவகாரத்தில் எந்த முன்னேற்றத்தையும் காண் பிக்காதவரை அரசாங்கத்தினால் மேற்குலக நாடுகளைத் திருப்திப்படுத்த முடியாது.

இதனால், அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் அரசாங்கத்துக்கு பெரும்



நெருக்கடி கொடுக்கும் ஒன்றாகவே அமையப்போகிறது. இதனை, தலைவலி என்பதை விட ஒரு அக்கினிப் பரீட்சை என்றே சொல்லலாம்.

இந்த நிலையில் மேற்குலக நாடுகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை விவாதிப்பதற்கு அல்லது இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதையும் நிறைவேற்றவதற்கு முனைந்தால், அதனைத்தடுப்பது எவ்வாறு என்று அரசாங்கம் யோசிக்க ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக பல் வேறு நாடுகளுக்கும், அமைச் சர்களையும் தூதுக்குழுக்களையும் அனுப்பி ஆதரவு தேடும் முயற்சிகள் தீவிரமடையப்போகின்றன.

இப்போது ஐரோப்பிய நாடுகளின் முழுமையான ஆதரவை இழந்துள்ள அரசாங்கம் குறிவைப்பது மத்திய கிழக்கு, ஆபிரிக்க, தென்னமெரிக்க, ஆசிய நாடுகளைத்தான். இவற்றில் அமெரிக்க எதிர்ப்புணர்வு கொண்ட நாடு களை குறிவைத்து அர்சாங் கம் காய்களை நகர்த்துகிறது.

47 உறுப்பினர்களைக் கொண் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், அதனை முறியடிப்பது ஒன்றும் சுலபமான காரியமில்லை. காரியமில்லை.

ஈரான், சிரியா போன்றன இலங்கைக்கு ஆதரவாகவே இருந்தாலும் அமெரிக்க எதிர்ப் புணர்வு கொண்ட இந்த நாடுகளுடனான நட்பு அரசுக்கு ஆபத்தாகவும் அமைந்துவிடலாம்.

எவ்வாறாயினும் இந்த முறை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் ஒன்றும் இலங்கைக்கு சாதகமானதொன்றாக அமை வதற்கு வாய்ப்புக்கள் குறைவாகவே தென்படுகின்றன.

அரசாங்கம் இந்தக் கூட்டத் தொடரை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு கடுமையாக போராட வேண்டியிருக்கும். அது விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்தபின்னர் என்பதை விட, இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், சர்வதேச அளவில் எதிர்கொள்ளப் போகும் உச்சக்கட்ட இராஜதந்திர நெருக்கடியாகக் கூட இருக்கலாம்.

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

தைரோய்ட்டு ஓமோன் குறைபாட்டினாலும் உடற்பருமன் உண்டாகும்.

**வாழ்க்கை முறை**

வீட்டிலுள்ள பெண்கள் பெரும்பாலும் மெகா தொடர்கள் முதல் ஒரு நாடகத்தையும் விட்டு வைக்காமல் பார்க்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்.

எப்போதும் தொலைக்காட்சி பார்த்தல், பகல் நேர உறக்கம், சீதோஷ்ணத்தினாலோ, பணியின் காரணமாகவோ ஒரேயிடத்தில் முடங்கிக் கிடத்தல், சிறுகச் சிறுக நொறுக்குத் தீனி, கவலைப்பட்டுக் கொண்டு பட்டினி கிடந்துவிட்டு ஒரே நேரத்தில் அதிகமாக சாப்பிடுவது, மது வகைகளை அருந்துவது மற்றும் நீரிழிவு நோய் ஆகியவற்றால் உடற்பருமன் அதிகரிக்கிறது.

**உடற்பயிற்சியின்மை**

நீரிழிவு நோய்க்கும் உடற்பருமனுக்கும் உடற்பயிற்சி இல்லாத நிலையானது உரம் போட்டு வளர்ப்பது மாதிரி.

உடற்பயிற்சி செய்யாததால் உடலிலுள்ள நாளங்கள் அனைத்தும் வலுவிழந்து மென்மையாகி நாளடைவில் சிதைந்து போகவும் வாய்ப்பிருக்கிறது. எனவேதான் பருமன் உள்ளவர்கள் உடற்பயிற்சி செய்து எடையைக் குறைக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

எதையும் செய்யாமல் அடுத்தடுத்து சாப்பிட்டு உறங்கி, வெறுமனே பொழுதைக் கழிக்கும்போது உடற்பருமன், பலவீனம் போன்றவை உண்டாகி இருதயம் பாதிக்கப்படும். நீரிழிவு நோயும் அதிகரித்துவிடும்.

**உணவுப்பழக்கம்**

உடற்பருமனுக்கு உணவுப்பழக்கம் முக்கிய காரணம். நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வாழ்வோரில் அதிக படிப்பறிவும் மருத்துவ அறிவும் இல்லாத மக்களிடையே உணவுப் பழக்கத்தால் வரும் பாதிப்புகள் பற்றி எதுவும் தெரிவதில்லை.

பலர் ருசிக்காகவும், பொழுது போக்கிற்காகவும் துரித உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், மாமிச வகைகள் ஆகியவற்றை உண்கிறார்கள். இவை நீரிழிவு நோயைத் தூண்டுபவை என்பதை யாரும் உணர்ந்து கொள்வ தில்லை.

உணவுப் பொருட்களை கொழுப்புச் சத்து உள்ளவை, நார்ச்சத்து உள்ளவை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

கொழுப்புச்சத்துள்ள உணவுப் பொருட்களுள் மாமிச வகைகள், வறுத்த உணவு, எண்ணெய் பொருட்கள், முட்டையின் மஞ்சள் கரு, வெண்ணெய் நீக்கப்படாத பால், பால் பொருட்கள், கிரீம்கள், இனிப்புப் பொருட்கள் ஆகியவை முக்கியமானவை. இவையனைத்தும் நீரிழிவு நோயை மிகைப்படுத்துபவையும்கூட. இவற்றை அதிகளவில் சாப்பிடும்போது தேவைக்கு மேல் கொழும்பு சேர்த்து வைக்கப்பட்டு உடலின் சுற்றளவு பெரிதாகிறது.

நார்ச்சத்து பொருட்களில் இத்தகைய கொழுப்புச் சத்துகள் குறைவாகவே இருக்கும். தவிர நார்ச்சத்துப் பொருட்கள் தேவையான சக்தியைத் தவிர ஏனையவற்றை வெளியேற்றி விடுகின்றன.

உணவுகளால் கொழுப்பு எவ்வாறு உண்டாகிறது, அது எவ்வாறு சீனியைத் தூண்டுகிறது, இருதயத்தைப் பாதிக்கிறது, பாலுறவுக் குறைபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

நீரிழிவு நோயிருக்கும்போது ஏற்கனவே சக்திகள் சரியாக பிரிக்கப்படாமலும் செல்களுக்குத் தேவையான சக்தி கிடைக்காமலும் போகும். நோயின் பாதிப்பினால் இரத்த நாளங்கள் நைந்திருக்கும் நிலையில் கொழுப்பும் சேர்ந்து அவற்றை சுருக்குவதால் இருதயத்திலிருந்து நாளங்களுக்குச் செல்லும் இரத்தம் சீரான வேகத்தில் சீரான அளவில் செல்ல இயலுவதில்லை. இதனால் இரத்த வேகம் அதிகரித்து இரத்த நாளங்கள் ஆங்காங்கே சிதைந்து போகும்.

கொழுப்புகளால் மிகச்சிறிய சிரை நாளங்கள் பாதிக்கப்பட்டால் செல்களுக்கு இரத்த ஓட்டம் இருக்காது. இதனால்தான் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மாரடைப்பு, இரத்த நாளப் பிரச்சினைகள் போன்றவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்நிலை ஆணுறுப்புக்கு இரத்தத்தைக் கடத்தும் நாளங்களில் ஏற்படும்போது ஆண்மை எழுச்சி உண்டாவது இல்லை. பெண்ணுக்குக் கடத்தப்படும்போது பெண்மைக்கான எழுச்சியும் இருக்காது. உடல் நலம் விரைவாக கேடுற்று பக்கவாதமாகவோ மாரடைப்பாகவோ இரத்த நாளம் அழுகுவதிலோ போய் முடியும்.

**கொழுப்பைத் தவிர்க்கும் வழிகள்**

ஏரோபிக் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், நடத்தல், நீந்துதல், ஓடுதல், குனிந்து நிமிர்ந்து ஏதேனும் வேலை செய்து கொண்டிருத்தல் போன்றவற்றில் ஈடுபடலாம். படிகளின் மீது ஏறுதல், இறங்குதல், குதித்தல் போன்ற சாதாரண செயல்களால்கூட தேக்கி வைக்கப்பட்ட கொழுப்பு வேகமாக எரிக்கப்பட்டு உடல் நலம் சீராகும்.

பொதுவாக ஆண்களுக்கு ஆயிரத்து 600 முதல் இரண்டாயிரம் கலோரி சத்தும் பெண்களுக்கு ஆயிரத்து 200 முதல் ஆயிரத்து 600 கலோரிகளும் தினமும் தேவை. இவற்றை எரிப்பதற்கு வசதியாக தசைத் திசுக்களின் அளவை அதிகரிக்க வேண்டும். கை, கால்களுக்குப் பயிற்சி தந்தால் தசைத் திசுக்கள் அதிகரிக்கும். இதனால் கூடுதல் கலோரிகள் செலவாகும்.

தனியாக பதினைந்து நிமிடங்கள் நடந்தால் சுமார் அறுபது கலோரிச்சத்து எரிக்கப்படும். நேரத்திற்குச் சாப்பிடுங்கள். ஒரேயடியாக உணவைச் சாப்பிடுவதைவிட அதை பல பங்காக்கி அவ்வப்போது சிறுகச்சிறுக சாப்பிடலாம். தினமும் எவ்வளவு கலோரி தேவை என்பதை கவனத்தில் வைத்துக் கொண்டு அதற்கேற்ப உண்பது தான் புத்திசாலித்தனம். சிறுகச் சிறுகச் சாப்பிடுவதால் நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்.




13



கொழுப்பை விட கார்போவைதரேட் பொருட்கள் தான் சீக்கிரமாக செலவாகும். எனவே, கொழுப்பை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சாப்பிடும்போது இடைவெயியில் பேசுவது கலோரிகளை எரிக்க உதவும்.

**பேராசிரியர்**
**டாக்டர்.டி.காமராஜ்,**
**M.D.,Ph.D.,P.G.D.C.G.,D.M.R.,**
**சென்னை.**

அதேபோல சாப்பிட்டவுடன் படுத்து விடாமல் சிறிது தூரம் உலாவச் செல்லலாம். லிப்டில் செல்லாமல் படியில் ஏறிச் செல்லலாம். அருகிலுள்ள நண்பரை தொலைபேசியில் அழைப்பதைவிட சென்று பார்த்துவிட்டு வரலாம்.

இசை கேட்கும் பழக்கம் இருந்தால் நமக்குச் தெரிந்த வகையில் ஆடலாம்.

இதனால் ஏரோபிக் பயிற்சியைப் போலவே இதிலும் கலோரிகள் குறையும்.

தோட்டம் ஏதேனும் இருந்தால் நாற்பது நிமிடங்களுக்கு அதைத் தோண்டுதல், செடிகளை நடுதல், தண்ணீர் ஊற்றுதல் போன்ற வேலைகளைச் செய்யலாம்.

சாய்ந்து உட்காராமல் நேராக உட்கார்ந்து படிக்கும் போதும் எழுதும்போதும் ஐந்து வீத கலோரிகள் எரிக்கப்படும்.

இப்படி சின்னச்சின்ன விடயங்களில் எல்லாம் கலோரிகள் எரிக்கப்படும் விதத்திலும் கொழுப்புப் பொருள் மிகையாகாத வகையிலும் பார்த்துக் கொண்டால் எந்த சூழலிலும் உடற்பருமன் ஏற்படுவதை உடனே தவிர்த்து விடலாம்.

(முற்றும்)

# குழந்தையின்மைக்கு சிகிச்சை

**குழந்தையின்மைக்கு பெண்கள் எந்த வகையில் காரணமாக இருக்கிறார்கள்? அதனை எப்படிக் குணப்பத்துகிறீர்கள்?**

கருமுட்டை வளர்ச்சி குறைபாட்டில் கருமுட்டை குறைவாக இருப்பது, இல்லாமலே இருப்பது, இருந்தும் வளராமல் இருப்பது போன்றவை அடங்கும். கருமுட்டை இருந்தும் வளர்ச்சி அடையாமல் இருக்க ஓமோன் குறைபாடு கூட காரணமாக இருக்கலாம். ஓமோன் அதிகம் சுரந்தாலும் முறையான கரு முட்டை வளர்ச்சி இல்லாமல் போகலாம்.

சில பெண்களுக்கு பாலிஸிஸ்டிக் ஓவரில் என்கின்ற சினைப்பை நீர்க்கட்டிகள் இருக்கும். கருமுட்டையில் குறை உள்ள பல பெண்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கலாம். இவர்களுக்கு சரியான மாதவிலக்கு இருக்காது. மேலும் இவர்கள் உடல் பருமனாகவும் இருப்பார்கள். சினைப்பையில் நீர்க்கட்டி இருக்கும் பெண்களுக்கு ஆண்கள் மாதிரி முடி வளர்ச்சி இருக்கும். ஆண்களுக்கான ஓமோன் அதிகம் இருப்பதனால்தான் இதுபோன்ற நீர்க்கட்டிகளும் முடிவளர்ச்சி, பருத்த உடம்பு, சரியான மாதவிலக்கு இன்மை ஏற்படுகின்றது.

கரு முட்டை வளர்ச்சிக்குறைபாடு எதனால் என்று கண்டறிந்து ஊசி மருந்து, மாத்திரை மூலம் சரிப்படுத்தலாம்.

சினைப்பை நீர்க்கட்டியை இம் முறைகளில் குணப்படுத்த இயலாவிட்டால் லேப்ராஸ்கோபிக் முறையில் நீர்க்கட்டிகளை அகற்றி குழந்தை பெற வைக்கலாம். கருமுட்டை வளர்ச்சி இல்லாத பெண்கள் தொடர்ந்து மூன்று மாதம் சிகிச்சை பெற்று குழந்தை பெறலாம்.

**கருமுட்டையே இல்லாத பெண்கள் குழந்தை பெற முடியுமா?**

கருமுட்டை இல்லாத பெண்களும் கருமுட்டை எண்ணிக்கை மிகமிக குறைவாக இருக்கும் பெண்களும் இன்றைய அதிநவீன மகப்பேறு மருத்துவத்தின் மூலம் குழந்தை பெறலாம். இந்தப் பெண்கள் சினை முட்டை தானம் பெற்று குழந்தைப்பேற்றைப் பெறலாம். இன்றைய நாட்களில் மாதவிலக்கு நின்ற பெண்கள் கூட சினைமுட்டை தானம் மூலம் குழந்தைப் பேறு பெறலாம். மகப்பேறு மருத்துவத்தில் இது ஒரு மைல்கல் ஆகும்.

**பிலோப்பியன் குழாய் (சினைப்பைக் குழாய்) அடைப்பு எதனால் ஏற்படுகிறது? இதற்கு என்ன சிகிச்சை?**

கிருமி தொற்று நோய்கள், பால்வினை நோய், முறையற்ற அபார்ஷன், காசநோய் இவைகள் தான் பிலோப்பியன் குழாய் அடைப்பிற்கு காரணம். சில பெண்களுக்கு கல்லடைசலுக்கு வயிற்றில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையினால் ஏற்பட்ட ஒட்டு காரணமாகவும் சினைப்பைக் குழாய் அடைத்துக் கொள்ளலாம்.

சினைக்குழாய் அடைப்பிற்கு கிருமி காரணமாக இருந்தால் மாத்திரை மருந்து மூலம் சரி செய்துவிடலாம். Adihesions காரணமாக இருந்தால் லேப்ராஸ்கோபிக் மூலம் சிகிச்சை செய்து அடைப்பை நீக்கலாம். சில பெண்களுக்கு ஹிஸ்ட்ரோகோபி மூலம் குழாய் அடைப்பை நீக்கலாம். இம்முறையில் ஒருவேளை அடைப்பை எடுக்க முடியவில்லையெனில் பரிசோதனைக்குழாய் முறையில் குழந்தை பெறவைக்கலாம்.

**பரிசோதனைக் குழாய் குழந்தை முறை இன்று வெற்றிகரமாகவும் வரவேற்புடையதாகவும் இருக்கக் காரணம் என்ன?**

1978 ஆம் ஆண்டு முதன்முதலாக உலகில் பரிசோதனைக்குழாய் குழந்தை அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் பின்னர் பலோப்பியன் குழாய் அடைபட்டிருந்தால் கூட குழந்தை பெற வைக்கலாம் என்கின்ற நிலை உண்டானது.இன்றைக்கு இந்த முறை வெற்றி அடைந்து பலரிடம் மிகுந்த வரவேற்பிக்கும் உள்ளாகி இருக்கிறது. 100 பேர்களுக்கு பரிசோதனைக்குழாய் முறையில் முயற்சித்தால் இதில் 25 முதல் சதவீதம்தான் வெற்றிக ரமாக அமையும். இருப்பினும் அடுத்தடுத்த தடவைகளில் முயற்சித்து வெற்றி வாய்ப்பை அதிகப்படுத்தலாம். சினைப்பையில் அடைப்பு இருந்தால் கருமுட்டை இல்லாதிருந்தால் அவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள ஒரேவழி பரிசோதனைக் குழாய் முறைதான் சிறந்தது. பரிசோதனைக்குழாய் குழந்தை என்பது கருமுட்டைகளை வெளியில் எடுத்து அதனுடன் ஆணின் உயிர் அணுக்களை சேர்த்து வளர்த்து வளர்ந்த கருவை மீண்டும் மூன்றாம் நாள் கருப்பையில் வைக்கும் முறைக்குத்தான் பரிசோதனைக் குழாய் குழந்தை என்று பெயராகும்.

**குழந்தையில்லாமைக்கு பெண்களின் ஓமோன்கள் குறைபாடு அல்லது கர்ப்பப்பை குறைபாடு காரணமாக இருக்கலாம் என்கிறீர்களே... அது எப்படி?**

சில பெண்களுக்குத் தைரோய்ட்டு சுரப்பி காரணமாக குழந்தையின்மை ஏற்படலாம். கருமுட்டை வளர்ச்சிக்கான ஓமோன்கள் (பிட்யூ ட்டரி) குறைபாடு காரணமாகவும் அதிரீனல் சுரப்பி குறைபாடு காரணமாகவும் குழந்தையின்மை ஏற்படலாம். எந்த ஓமோன் காரணம் என்பதை துல்லியமாகக் கண்டறிந்து இன்றைய நாளில் குணப்படுத்தி குழந்தைப் பேற்றை உண்டாக்கலாம்.

கர்ப்பப்பை குறைபாட்டில் பைப்ராய்டு என்கிற கர்ப்பப்பைக் கட்டியைக் குறிப்பிட வேண்டும். இதனாலும் குழந்தையின்மை ஏற்படலாம். இக்கட்டிகளை லேப்ராஸ் கோபிக் முறையில் அகற்றி விடலாம். பிறவியிலேயே சில பெண்களுக்கு இரண்டு கர்ப்பப்பை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பை சிறியதாக இருப்பது, கர்ப்பப்பை வடிவமைப்பில் பிறவியில் ஏற்பட்ட குறைபாடு காரணமாகக் குழந்தையின்மை ஏற்படலாம். இக்குறைபாட்டை சத்திரசிகிச்சை மூலம் சரி செய்யலாம்.

**லேசர் முறையில் குழந்தை பெற வைக்கும் நவீன மருத்துவத் தொழில்நுட்பம் பற்றி குறிப்பிடுங்கள் டாக்டர்?**

பரிசோதனைக் குழாய் குழந்தை முறையில் வெற்றி வாய்ப்பு 25 முதல் 30 சதவீதம்தான்.

01



ஒரு தடவை யிலேயே ஒருவருக்கு வெற்றிஅடைந்து விடாது. தோல்வி அடையக் காரணம் கரு முட்டை கருவாகும் ஆனால், வளராது. சில பெண்களின் கரு முட்டை வெளித்தோல் தடிமனாக இருப்பதால் விந்து உள்ளே போக முடியாது. இதனால்கூட பரிசோதனைக் குழாய் குழந்தை முறை வெற்றியடையாது. இவர்களுக்கு நவீன முறையில் கருவின் தோல் தடிமனை லேசர் மூலம் குறைக்கும் போது செல் வளர்ந்து கரு சரியாக உண்டாக்க வாய்ப்புள்ளது. இந்த முறைக்கு லேசர் அஸிஸ்ட்டட் ஹேட்சிங் என்று பெயராகும். வயது கூடின பெண்களும் இந்த முறையில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.

பரிசோதனைக் குழாய் குழந்தை முறையில் உருவாகும். குழந்தை நல்ல கருவா என்று

**டாக்டர்.கே.எஸ்.ஜெயராணி,MD.,DGO.,**
**சென்னை-26.**

கண்டறிய லேசர் முறையில் கருவில் துளையிட்டு கருவில் உள்ள பல செல்களில் ஒரு செல்லை மட்டும் எடுத்து அந்தச் செல்லை Fish எனும் முறை யில் பரிசோதித்து அது நல்ல கரு என்று உறுதி செய்து மறுபடியும் கருப்பையில் எடுத்து வைக்கலாம். இதனால் மரபு ரீதியாக பரம்பரையாக வரும் பிறவிக் குறைபாட்டை இச்சோதனை மூலம் தவிர்க்கலாம்.

**வாடகைத்தாய் முறையில் குழந்தை பிறப்பிப்பது எப்படி?**

சிலருக்கு கருப்பையே இருக்காது. இவர்களும் இன்றைய நாளில் குழந்தை பெற முடியும். சிலருக்கு சினைப்பை மட்டும் இருக்கும். கருப்பை இருக்காது. இவர்கள் சினை முட்டையை கணவனின் விந்தணுவுடன் சேர் வைத்து வாடகைத்தாயின் வயிற்றில் வளர்த்து குழந்தை பெற்றுக் கொள்ளலாம். இவை எல்லாம் மகப்பேறு மருத்துவம் அடைந்துள்ள நவீன முன்னேற்றங்களாகும். (முற்றும்)

# சிறுபான்மை மக்களின் நலன்கருதியே 13 ஆவது திருத்தத்தில் செனட்சபை

## த.தே.கூ.பயன்படுத்த வேண்டும் என்கிறார் டலஸ்



(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் விலகிச் செல்லவில்லை. அந்த பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தில் செனட் சபை என்ற அம்சத்தை சிறுபான்மை மக்களின் நலன்கருதிய அரசாங்கம் கொண்டு வருகின்றது. அந்த வகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதனை தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் அரசியல் தீர்வு செயற்பாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இந்த விடயத்தில் மேலும் கூறியதாவது, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இழக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். காரணம் 2016 ஆம் ஆண்டுவரை நாட்டை நிர்வகிக்கக்கூடிய மக்கள் ஆணையை நாங்கள் பெற்றுள்ளோம்.

அதுமட்டுமன்றி வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கணிசமான வாக்குகள் கிடைத்துள்ளன. அந்த வகையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவங்களும் எம்மிடம் உள்ளன.

எனவே, 2016 ஆம் ஆண்டுவரை நாட்டை நிர்வகிப்பதற்கு ஆணையை பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இழந்து விடக்கூடாது.

கூட்டணி, அரசாங்கம் ஒன்றில் எவ்வாறான பிரச்சினைகள், சிக்கல்கள் எழும் என்பதனை புதிதாக கூறவேண்டியதில்லை. ஆனால், அவற்றை சமாளித்துக்கொண்டு நாங்கள் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். அதனை கூட்டமைப்பு புரிந்து கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

யுத்த காலத்தில் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டது. ஆனால், இந்திய மத்திய அரசாங்கம் எமது அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்டது. அதற்காக தமிழக அரசு மத்திய அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டு அரசாங்கத்தை கவிழ்க்கவில்லை.

சிக்கல்களுக்கு மத்தியில் தீர்வுக்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக நாங்கள் முயற்சிக்கையில் அதற்கு ஆதரவு வழங்க வேண்டியது ஏனைய கட்சிகளின் பொறுப்பாகும்.

எனினும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. அந்த நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் விலகிச் செல்லவில்லை. அது எமது பொறுப்பாகும்.

எனவே, தீர்வுத்திட்ட விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் தான் இருக்கின்றது. ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு பயன்படுத்த வேண்டும். (அ-2)

# நன்னீர் மீன்வளர்ப்புகள் தொடர்பில் ஆராய்வு

தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தினர் யாழ்.மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்தில் தொண்டமனாறுக் கடல் நீரேரியில் மீன் வளர்க்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தின் அதிகாரிகளும் பிரதேச மீனவர் பிரதிநிதிகளும் இந்த ஆய்வுகளை மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் நன்னீர் மீன்பிடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6-3)

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பெயர்களை பரிந்துரை செய்யும்

## நம்பிக்கையுள்ளது என்றார் விஜேசிங்க

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. தீர்வுத்திட்டமானது செயற்பாட்டுத் தன்மையை பெறுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்கேற்பு அவசியமாகும் என்று ஆளும் கட்சியின் பேச்சு வார்த்தைக்குழுவின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேரோசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தற்போதைய நிலைமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு முயற்சிப்பதானது யதார்த்தமானதாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. எனவே, தற்போது நியமிக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இடம்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பாராளுமன்ற தெரிவுக்குழுவை இது வரை நிராகரிக்கவில்லை. எனவே, விரைவில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அவர்கள் இடம் பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

எனவே, அரசியல் தீர்வுத்திட்டத்தின் யதார்த்த தேவையை புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறும் என்று நம்புகின்றோம் என்றார். (அ-2)

# கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடநெறியை பின்பற்ற விரும்புவோர் க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். அல்லது ஏதேனும் நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். அன்றேல் ஏதேனும் மூன்று பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது நிரம்பியவர்களாகவும் 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியினை மேற்கொள்ள தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை, தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றை உள்ளடக்கிய சுய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து மாவட்ட முகாமையாளர், NAITA இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் காகித உறையின் இடது பக்கமேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (NCICT) இற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். (அ-2-7)

# இலங்கை அரசிடம் பொருளாதாரம் தொடர்பில் உரிய திட்டம் இல்லை


தேசிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் எவ்வித பதிலும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிடுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ரீதியிலான பல பிரச்சினைகள் தற்போது உருவாகியுள்ளதாக குறிப்பிட்ட அவர், தேசிய பிரச்சினை குறித்து பதில்கூற முடியாமல் இலக்குகள் இன்றி பட்டும்படாமலும் பயணிக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

பொருளாதாரம் குறித்து உரிய திட்டமொன்று இல்லை எனவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட அரசாங்கத்தினால் அண்மையில் பல சட்டங்கள் வாபஸ்பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளகரீதியானபாரியவீழ்ச்சியைசந்திக்கும் அச்சுறுத்தலை தற்போதைய அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பின்போது அமைச்சர் சந்திரசிறி கஜதீர உரையாற்றுவதையும் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார் மொழிபெயர்ப்பு செய்வதையும் ஏனைய பிரமுகர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் முன்னாள் போராளிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அமைச்சரிடம் தெரிவிப்பதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# 15 நாட்டு இராணுவ வீரர்களுடன் இந்திய வீரர்கள் போர் பயிற்சி

(புதுடில்லி)

அமெரிக்கா, ரஷ்ய உட்பட 15 நாட்டு இராணுவத்துடன் இந்திய இராணுவத்தினர் இந்த ஆண்டு போர் பயிற்சியில் ஈடுபட திட்டமிட்டுள்ளனர்.

இந்திய இராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு இராணுவங்களுடன் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். புதுமையான போர் யுக்திகள், நவீன ஆயுதங்களைப் பற்றி தெரிந்து கொள்ள இந்த பயிற்சி உதவும். குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாட்டு இராணுவத்துடன் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் இந்திய இராணுவத்தினர் புதிய விடயங்களை கற்றுக் கொள்ள முடிகின்றது.

இதுபற்றி இராணுவ மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டில் நம்முடைய நட்பு நாடுகளில் 15 நாடுகளை சேர்ந்த இராணுவத்துடன் போர் பயிற்சியில் ஈடுபடவுள்ளோம். எதிர்வரும் மார்ச் மாதம் சிங்கப்பூர் இராணுவத்துடன் போர் பயிற்சி நடக்கிறது. உ.பியில் ஜான்சி அருகே உள்ள பபினாவில் நடக்கும் இந்தப் போர் பயிற்சிக்கு குருசேத்ர துணிவு என்று பெயரிடப்பட்டுள்ளது.


இதுதவிர அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய பெரிய நாட்டு இராணுவத்துடன் பயிற்சியில் ஈடுபடுவோம். இராஜஸ்தான் பாலைவனப் பகுதியில் அமெரிக்க இராணுவத்தினருடன் போர் பயிற்சி நடக்கும் . இதற்கு யுத்அப்யாஸ் என்ற பெயரிடப்பட்டுள்ளது.

இந்தபயிற்சிக்காகஅமெரிக்க இராணுவத்தினர் நவீன பீரங்கிகளை கொண்டுவரவுள்ளனர். அயல்நாடான வங்காளதேசத்துடன் பயிற்சியில் ஈடுபடவும் முடிவு செய்துள்ளோம். இந்த ஆண்டு நடக்கும் பயிற்சியில் தீவிரவாத எதிர்ப்பு மற்றும் நகர்ப்புற போருக்கு முக்கியத்துவம் தரப்படும் என அவர் கூறினார். (அ-2)



**விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த நாளையொட்டி அமெரிக்கா சிகாகோவிற்கு சென்ற இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.**

# ஊர்வலத்தில் கலவரம் 3 பேர் பலி: 100 பேர் காயம்



(தாகா)

வங்கதேச அரசுக்கு எதிராக எதிர்க்கட்சி நடத்திய ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தின் போது பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் 3 பேர் பலியாகினர். சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

எதிர்வரும் 2014 இல் நடக்கவுள்ள வங்கதேச பொது தேர்தலை கருத்தில் கொண்டு பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அரசு தேர்தல் கண்காணிப்பு முறையில் சில மாற்றங்களை கொண்டு வந்தது. அது நடுநிலையான பொது தேர்தல் கண்காணிப்புக்கு எதிராக உள்ளதாக கூறி முக்கிய எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சியுடன் (பிஎன்பி) இணைந்து ஜமாத் இஸ்லாமி கட்சியினர் நேற்று முன்தினம் கண்டன ஊர்வலம் நடத்தினர்.

தடையை மீறி நடத்தப்பட்ட அந்த ஊர்வலத்தில் கலவரம் வெடித்தது. கலவரத்தை ஒடுக்கி பொலிஸார் இறப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். அப்போது குண்டடி பட்டு 2 ரிக்ஷாகாரர்கள் உட்பட 3 பேர் பலியாகினர். மேலும் சுமார் 100 பேர் காயமடைந்ததாக கூறப்படுகின்றது. (அ-2)

# இந்திய தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் நிலை

## மீனவர்கள் அதிர்ச்சி

(நாகப்பட்டினம்)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் நிலை தொடர்வதால் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்துள்ள நாகை அக்கரைப் பேட்டை கிராம மீனவர்கள் கடந்த 27 ஆம் திகதி இரவு கூட்டம் நடத்தினர். இதில் மீனவர்கள் மீன்களை தேடி ஆழ் கடல் பகுதிக்குப் செல்லும் போது இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாவதோடு எல்லை தாண்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் எழுகின்றது.

எனவே, மீனவர்கள் மீன்களை தேடி கடலில் நீண்ட தூரம் செல்லக் கூடாது. மீறி செல்லும் படகுகளுக்கு கடலில் மீன்பிடிக்க ஒரு வாரம் தடைவிதிப்பதோடு படகு உரிமையாளர் ஒரு இலட்ச ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்று கூட்டத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீன்பிடித் தொழில் கேள்விக்குறியாக மாறும் நிலை ஏற்படும் என்பதால் மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (அ-2)


## பாரதச் செய்தி

# மன்மோகன் நேர்மையானவர்

## புகழ்கின்றார் கிலானி

(சென்னை)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் நேர்மையான மனிதர் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி புகழ்ந்துள்ளார்.




உலக பொருளாதார அமைப்பின் மாநாடு சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் இந்தியா, பாகி ஸ்தான் உட்பட பல்வேறு நாடுகள் பங்கேற்கின்றன. மாநாட்டில் பாகி ஸ்தான் பிரதமர் கிலானி பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார். அப்போது அவர் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் நேர்மையான மனிதர் என்று பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேர்மை மிக்க பிரதமர் மன்மோகன் சிங் காஷ்மீர் உள்ளிட்ட இரு நாடுகளுக்கு இடையே உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் மிகவும் அக்கறையுடன் இருப்பதாக பிரதமர் கிலானி தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியாவின் 12 ஆவது 5 ஆண்டுகால திட்டத்திற்கு 50 இலட்சம் கோடி தேவை

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

(சென்னை)



அமெரிக்காவில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டார்.

இந்தியாவில் 12 ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மின்சாரம், தொலைத் தொடர்பு துறைமுகம், விமான நிலையம், பெற்றோலியம், சுரங்கம் போன்ற உள்கட்டமைப்பு துறைகளில் மேம்பாட்டுக்கு ரூ. 50 இலட்சம் கோடி முதலீடு தேவைப்படும்.

இதன் மூலமாக முதலீட்டாளர்களுக்கு பல்வேறு வாய்ப்புக்களை இந்தியா ஏற்படுத்தி தந்துள்ளது. எனவே, இத்துறையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் முதலீடு செய்ய வேண்டும்.

அண்மையில் இந்திய பங்குச் சந்தைகளில் வெளிநாட்டினர் நேரடியாக முதலீடு செய்ய ஏதுவாக விதி முறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதை பயன்படுத்தி இந்திய உட்கட்டமைப்பு துறையில் அதிகமான வெளிநாட்டினர் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (அ-2)

# சுற்றுச்சூழல் மாசுகளை தடுப்பதில் இந்தியாவுக்கு 125 ஆவது இடம்

## ஆய்வில் தகவல்

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுகளைத் தடுப்பதிலும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் இந்தியா 125 ஆவது இடம் வகிப்பதாக யேல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொருளாதார அமைப்புடன் யேல் மற்றும் கொலம்பிய பல்கலைக்கழகம் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டது.

வளர்ந்து வரும் நாடான இந்தியா சுற்றுச்சூழலை காப்பதில் பின் தங்கியுள்ளது. இந்நிலையை மாற்ற இந்திய அரசியல் தலைவர்கள் விழித்துக்கொள்ள வேண்டும்.

சுற்றுச் சூழல் குறித்த அதன் கொள்கைகளை இருமடங்கு அதிகரிக்க வேண்டும் என்று யேல் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் மையத்தின் இயக்குநர் டேனியல் தெரிவித்தார். சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் சுவிட்சர்லாந்து முதலிடம் வகிக்கின்றது. அமெரிக்கா 49 ஆவது இடத்திலும் சீனா 116 ஆவது இடத்திலும் உள்ளன.

132 நாடுகளில் 22 காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விவசாயத்துறையை வளர்ப்பதற்கே தொழில்நுட்பங்கள் பயன்படவேண்டும்

## பேராசிரியர் மிகுந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சில நிறுவனங்கள் சந்தைப்படுத்தும் பொருட்களில் அதிகளவு தென் பகுதிப் பொருட்களாகவே காணப்படுவதால் எமது பிரதேச உற்பத்திகள் வீழ்ச்சியடைகின்றன என யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைப் பேராசிரியர் மிகுந்தன் தெரிவித்தார்.

இலங்கை மத்தியவங்கியின் வடமாகாண அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலீட்டாளர் வலுவூட்டும் நிகழ்வு ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெற்றது.இதில் வடமாகாண விவசாயத்துறையில் முதலீடு மற்றும் உற்பத்தி வாய்ப்புக்கள் என்னும் தொனிப் பொருளில் விரிவுரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காகில்ஸ் போன்ற நிறுவனங்கள் தென்பகுதிப் பொருட்களினை சந்தைப்படுத்தும் போது எமது உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் இவ்வாறான நிறுவனங்களில் சந்தைப்படுத்தும் 50 வீதமான பொருட்கள் பரம்பரையாக மாற்றப்பட்ட பண்டங்களாக காணப்படுகின்றன.இது எதிர்காலத்தில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

எங்களுடைய பொருட்களை பிற நாடுகளுக்கு கொண்டு சென்று அங்குள்ள நிறுவனங்களினூடாக தயார்படுத்தி மீண்டும் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நாமும் அதனை கொள்வனவு செய்கின்றோம்.

இவ்வாறான நிலைமைகளை மாற்றி எமது பொருட்களை நாமே உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முறையினை ஏற்படுத்துவதன் மூலம் எம்பிரதேச உற்பத்திகளை ஊக்குவிக்க முடியும்.

வெளிநாட்டிலிருந்து வரும் பொருட்களிற்கு நாம் எப்போது முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தோமோ அப்போதிலிருந்தே எமது உள்ளூர் உற்பத்திகள் பாதிப்படையத் தொடங்கிவிட்டன.

தொழில்நுட்பத்தில் மட்டும் நாட்டம் கொண்டுள்ள எமது இன்றைய இளைய சமுதாயத்தினை விவசாயத்திலும் தொழில் நுட்பங்களின் ஊடாக நாட்டம் கொள்ள வைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்பம் கலாசார சீரழிவிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

இதனை நாம் விவசாயத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் எம்பிரதேச விவசாயத்தினை மேம்படுத்த முடியும்.

தனியே வர்த்தகத்தினை மட்டும் நோக்காது நுகர்வோரின் தேக ஆரோக்கியத்தினை கருத்திற் கொண்டு சேதன முறை உற்பத்தியினையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் பயிர்களுக்கென சங்கங்களினை உருவாக்கியும் எமது சந்தைப்படுத்தலை விரிவுபடுத்திக் கொள்ள கப்பற் துறைமுகம், விமான நிலையம் ஒன்றும் அவசியமும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் குளறுபடி

## ஜே.வி.பி. தெரிவிப்பு

அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் தோல்வியை தழுவியுள்ளதாக கூறியுள்ள ஜே.வி.பி. இத்திட்டத்தை அரசாங்கம் உடன் இரத்துச் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுவதாக அரசாங்கம் கூறினாலும் இதற்காக பின்பற்றப்படும் முறைமைகள் ஒருவருக்கும் தெரியாது என நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பாடசாலைகளைத் தெரிவு செய்வதில் சனத்தொகை அடர்த்தி, புவியியல்சூழ்நிலை,இனத்துவடன்மை தன்மை ஆகியன கவனத்திற் கொள்ளப்பட்டனவா என அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இவற்றில் எதுவுமே கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதை நாம் அறிவோம். அரசியல்வாதிகளின் சிபாரிசின் அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன என அவர் கூறினார்.

எனினும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி பாடசாலைகள் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்டவை எனவும் எனவே இத்தெரிவுமுறை குறித்து யாரும் ஆட்சேபிக்க முடியாது எனவும் கூறினார்.

மொத்தமாக 6 ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மத்தியவங்கி வடமாகாணத்தில் அதிக கடன்களை வழங்கியுள்ளது

## மத்தியவங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மாணிக்கசிங்கம்

இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிட வடமாகாணத்திலேயே இலங்கை மத்தியவங்கி அதிகளவான கடன் வழங்கியுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மாணிக்கசிங்கம் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தினால் நடத்தப்பட்ட முதலீட்டாளர்களை வலுவூட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களை விட வடமாகாணமே நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.இதனால்தான் வடமாகாணத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இக்கடன் தொகைகளில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களிற்கே அதிகளவில் வழங்கி வருகின்றோம்.

அச்சுவேலி, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கிளைகளினூடாகவே இலங்கை மத்தியவங்கி அதிகளவிலான கடன்களை வழங்கியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாணத்தில் வழங்கப்பட்டுள்ள கடன்களில் 98வீதமானவை மக்களினால் திரும்பப் பெறப்பட்டுள்ளன. மீதி 2 வீதம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட சூழ்நிலைகளினால் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் மீன்பிடித்தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் மீன்பிடி சம்பந்தமான கடன்தொகையின் உச்சஅளவாக 20 இலட்சம் வரை வழங்கியுள்ளோம். இதற்கு குறைந்தளவு வட்டியே அறிவிடப்படுகின்றது.மேலும் மக்களிடத்தில் தவறான கருத்தொன்றுள்ளது.சுய கடன் தொழில் ஊக்குவிப்பு கடன்தொகையினை பெறுவதற்கு அரச உத்தியோகத்தர்களின் சிபாரிசு தேவைஎன்று. இது தவறானது ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## தைப்பூச திருவிழா


(முழங்காவில்)

முழங்காவில் பிள்ளையார் ஆலயத்திலும், முழங்காவில் முருகன் ஆலயத்திலும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தைப்பூசத்திருவிழா நடைபெறவுள்ளது.

இதேவேளை முழங்காவில் வைத் தியசாலைக்கு அருகாமையில் உள்ள அம்மன் ஆலயத்திலும் மேற்படி திருவிழா நடைபெறவுள்ளதாக முழங்காவில் ஜெகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார். (அ)

# மும்மொழிக்கொள்கையால் மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## அமைச்சர் வாசுதேவ நம்பிக்கை



(கொழும்பு)

இருநாட்டு கொள்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றி வருவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் சகல இன மக்களையும் ஐக்கியப்படுத்தும் முனைப்புக்களில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.


பத்தாண்டு கால மும்மொழிக் கொள்கையின் ஊடாக பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இரு நாட்டு கொள்கைகளை பின்பற்றி வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிங்கள கடும்போக்குடைய கட்சிகள் சிறுபான்மை மக்கள் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வாழ வேண்டுமென எதிர்பார்க்கின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கம் வழங்குவதனை சிறுபான்மை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கடும் போக்குடைய சிங்கள கட்சிகள் இருக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடு அரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கைகளை பாதிக்கக்கூடும் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (அ-2)



கண்டி வைத்தியசாலை பத்துமாடிகளைக் கொண்ட புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இக் கட்டடத்திற்கான காசோலையினை ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

# பசும்பால் பயன்பாட்டை அதிகரிக்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நாடெங்கிலும் பசும்பால் பயன்பாட்டை பரவலாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

பொலனறுவையிலுள்ள மில்கோ கைத்தொழிற்சாலைக்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் திடீரென விஜயம் செய்துள்ளார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

பால்மாக்களை தொடர்ந்தும் இறக்குமதி செய்வதை விடுத்து பசும்பால் பயன்பாட்டை பரவலாக்க வேண்டும். பசும்பால் தரமானது, வளமானது. இதன் பயன்பாடு பரவலாக்கப்படும் போது உள்ளூர் பாலுற்பத்தியாளர்களே பாதுகாக்கப்படுவர். இதனால் அவர்கள் வாழ்விலும் சுபீட்சம் ஏற்படும். நாட்டில் பசும்பால் பயன்பாட்டை மேம்படுத்துவதும் பசும்பால் விற்பனையை ஊக்கு விப்பதும் மஹிந்த சிந்தனையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வேலைத் திட்டங்களாகும்.

இலங்கைக்கு வருடாந்தம் 75 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கும் மேல் பால்மா இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காக சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றது.

இவ்வளவு தொகை அந்நிய செலாவணியை வெளிநாட்டுக்குச் செலுத்துவதை சாதாரண ஒரு விடயமாக பார்க்க முடியாது.

இதனை நாட்டுக்குள் மீதப்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்.அதன் மூலம் துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தலாம். அதனால் பசும்பால் பயன்பாட்டைபரவலாக்குவதுஅவசியம்.

அதேநேரம் பசும்பாலை அடிப்படையாக் கொண்ட பொருட்களின் உற்பத்திகளும் குறைவின்றி மக்களுக்கு கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்றார்.

இதேநேரம் பொலனறுவை மில்கோ தொழிற்சாலையின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் நோக்கில் பின்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 315 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (அ-2)

மனிதனின் பெருமையும் சிறுமையும் அவன வன் இதயத்தினுள் இருக்கின்றன.

– சீனப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் தீராத கோபம் யாருக்கென்ன இலாபம்?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் மக்கள் மீதான பகைமை இன்னமும் தீரவில்லை என்பதை உணரமுடிகின்றது.

விடுதலைப் புலிகளை போரில் வெற்றி கொண்டது; அந்தப் போரால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தது; அவர்கள் இன்னமும் இழப்புகளில் இருந்து மீட்சிபெற முடியாமல் தவிப்பது; இப்படியான இடுங்கண்களை தமிழ் மக்கள் அனுபவிக் கின்ற வேளையிலும் அவர்கள் மீதான ஆத் திரமும் கோபமும் ஜனாதிபதியிடம் தணியவில்லை என்பதை உணர முடிகின்றது.

உண்மையில் வன்னியில் நடந்தது போன்ற போரை வேறொருவர் நடத்தியிருப்பாராயின் அந்தப் போரில் வன்னியில் நடந்த மிகக் கொடூ ரமான மனிதப் பேரழிவுகள் ஏற்பட்டிருக்குமா யின் போரை நடத்தியவர், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தான் ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என எண்ணியிருப்பார். அதுவே மனித இயல்பும் கூட.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ மேலும் மேலும் தமிழ் மக்கள் மீது கடும் கோபம் அடைபவராக இருக்கின்றார்.

இதனை நினைக்கும்போது 'பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்; தீராத கோபம் யாருக்கென்ன இலாபம்' என்ற பாடல் வரிகளே நினைவுக்கு வருகின்றன.

இந்த நாட்டின் ஜனாதிபதி என்பவர் எல்லா மக்களையும் சம கண் கொண்டு பார்ப்பவராக இருக்க வேண்டும்.

அவரிடம் இனம், மதம், மொழி என்ற பிரி பாடல் இம்மியும் இருத்தல் ஆகாது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் ஆட்சியாளர்கள் இன மத மொழி அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கின்றனர்.

இதன் காரணமாக இந்த நாட்டில் இனத்துவ ஒற்றுமை என்பது விரிசல் அடைவதாகவே இருக்கின்றது.

இவ்வாறானதொரு பகைமை உணர்வுக்கு விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்கள் காரணமா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவை ஆதரித்து காரணமா? என்ற வாதப் பிரதிவாதங்களின் மத்தியில்,

இந்த நாட்டில் சிங்கள மக்கள் ஆளப் பிறந் தவர்கள். தமிழ் மக்கள் வந்தேறு குடிகள். எனவே உண்மையான பௌத்த சிங்களவர் ஒருபோதும் தமிழ் மக்களை உரிமையுடையவர்களாகப் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு உரிமை கொடுப்பதையும் விரும்ப மாட்டார்கள்.

மேலும் இலங்கையின் ஆட்சியாளர் சிங்கள மக்களின் முழுமையான ஆதரவைப் பெறவேண் டுமாக இருந்தால், தமிழ் மக்களை அதிஉச்ச பட்சமாக நசுக்குபவராக இருக்க வேண்டும் என்ற கோட்பாடும் நடைமுறையில் உண்டு.

எதுவாயினும் இலங்கை என்ற இந்த நாடு அனைத்து வழியிலும் அபிவிருத்தியடைய வேண்டுமாயின்,

எதிர்காலத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டுமாயின், வன்னிப் போர் போன்று இன்னோர் போர் இடம்பெறாமல் இருக்க வேண்டுமாயின் இலங்கைத் தீவில் இருந்து பேரினவாதப் பேய் துரத்தப்பட வேண்டும்.

பௌத்த சிங்களப் பேரினவாதப்பேய் ஆட்சி யாளர்களிடமும், சிங்கள மக்களிடமும் இருக் குமாயின், கௌதம புத்த பிரான் வந்தாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பது சர்வ நிச்சயம்.

ஆக, பகையும் தீராத கோபமும் அழிவைத் தருமேயன்றி ஒருபோதும் அவை ஆக்கத்திற்கு உதவுபவை அல்ல என்பது உணர்தற்குரியது.

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து ஐ.நா.வில் கேள்வியெழுப்பினால் பதிலளிப்போம்

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக் கமும் தொடர்பான ஆணைக்குழு வின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை க்கு இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக் காவிடினும் மனித உரிமைப் பேரவை யில் அது தொடர்பில் கேள்வியெழுப் பப்பட்டால் அவற்றுக்குப் பதிலளிக்க தயார் என்று பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சரும் மனித உரிமை விவகாரம் தொடர்பான ஜனாதிபதி யின் விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுச் செயற்பாடானது உள்நாட்டுக் கட்ட மைப்புக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டமாகும். அதனை ஐ.நா மனித உரிமைப் பேரவைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என் றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக் கிய நாடுகளின் சபையின் மனித உரி மைப் பேரவையின் 19ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச்மாத நடுப்பகு தியில் நடைபெறவுள்ளது. இந்நிலை யில் இதற்கான தயார்படுத்தல்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமை ச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிலையில் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான ஜனாதிபதி யின் விசேட தூதுவரான அமைச்சர் சமரசிங்க மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நா.வின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட தாருஷ் மான் குழுவின் அறிக்கையை ஜெனீவா வில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் விவாதிப்பதற்கு நாங்கள் கடந்த அமர் வின் போது இடமளிக்கவில்லை. அதனை பல முயற்சிகளை முன்னெடுத்து தடு த்து நிறுத்தினோம்.

எனினும் தற்போதைய நிலைமை யில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சர்வதேச நாடுகள் அறிந்து கொண்டுள்ளன.

எனவே மனித உரிமைப் பேரவை யின் கூட்டத் தொடரின்போது குறித்த நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து கேள்வி எழுப்பினால் அவற்று க்கு பதிலளிக்க நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். கேள்விகள் எழுப்பப்ப டும் பட்சத்தில் பதிலளிக்க எம்மால் முடி யும்.

அது தொடர்பில் சிறந்த முறையில் இலங்கை தயாராகி வருகின்றது. சர்வ தேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதுடன் நாட்டில் மனித உரிமை செயற்பாடுக ளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து தெளிவுபடுத்தி வருகின்றோம். மேலும் பல்வேறு பிரதிநிதிகளை சந்தி த்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையில் யுத்தத் துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள முன்னேற் றங்கள் குறித்து விளக்கமளிப்போம். கூட்டத்தொடருக்கு தேவையான வகை யில் நாங்கள் தயாராகி வருகின்றோம் என்றார். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மு/ வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி அ.சிறிஸ்கந்த ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மாந்தை கிழக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு. சிவலிங்கம், வன்னி விளாங்குளம் கிராம அலுவலர் ப. பிரதீபன், அம்பாள்புரம் கிராம அலுவலர் கு.சுபராம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

# வைத்தியர்களுக்கான எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப தர வைத்திய உத்தியோகத் தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத் திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதி மும்மொழிகளிலும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சையினை இதுவரை பூர ணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத் திய உத்தியோகத்தர்களும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் களும் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப் பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்கள் யாவும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமை வாக ஏ4 தாளின் இரண்டு பக்கங்க ளையும் உபயோகித்து தயாரிக்கப் படல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

இப்பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட் சைக் கட்டணம் செலுத்த தேவையில்லை. ஏனையோர் ஒரு விடயத்திற்கு 25 ரூபா வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி இதன் மேல் கையொப்பத்தினையும் திகதியையும் இட்டு செல்லுபடி நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைக்கு செலுத் தவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

விண்ணப்பப்படிவங்கள் யாவும் நிறுவனத் தலைவரின் மூலம் சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இல 385, வண பத்தேகமவிமலவங்சதேரோ்மாவத்தை, சுவசிரிபாய பணிப்பாளர் என்னும் முகவரிக்கு மார்ச் 5 ஆம் திகதிக்கு முன் னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக் கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் முகவரி எழுதப் பட்ட உறையினுள் 30 ரூபா பெறுமதி யான முத்திரை ஒட்டி அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்பட்டவிடத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

பரீட்சை பற்றிய மேலதிக தகவல்க ளுக்கு கடந்த 27 ஆம் திகதி வெளியா கிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ அல் லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (அ-7)

# மரதன் ஓட்டத்தின் வெற்றியாளர்கள்

கிளி/ பூநகரி மகாவித்தியாலயத் தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு கடந்த வாரம் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் 100 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரம் வருமாறு,

**ஆண்கள் பிரிவு**

பொ.ருஜிந்தன், இ.நிதர்சன், சி.சிவநவநீதன்.

**பெண்கள் பிரிவு**

சி.தர்மினி, உ.சுசீனா, ந.சுதர்சினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட னர். (அ-7-84)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மறந்தால் மகிழ்ச்சி வரும்



மனித வடிவம் கொண்ட ஒவ்வொருவரும் உயி ரையும் வழிபடுங்கள். பகவானை அனைத்து வடிவ த்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி. இரக்கத்தால் மனிதனுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் பணி செய்தல் நன்மை தரும். பொறுமைதான் அனைத்து பணிகளையும் செய்து முடித்து வெற்றிபெற ஆணிவேராக இருக்கும். பொறு மையுடன் உற்சாகத்தையும் கூட்டிவிட்டால் வெற்றியின் எல்லைக்கு விளிம்பே கிடையாது.

கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளையிடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். ஒன்றாக கூடிவாழ்தலே நமக்கு வேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை. கீழ்ப்படிவதே அதன் இரகசியம்.

விருப்பங்களுக்கும் கோபத்திற்கும் அடிமையாய் இருப்பவனால் உண்மை யான சுதந்திரத்தின் இன்பத்தை உணர முடியாது.

எந்தச் சூழலிலும் இனிமையோடும் புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

இரகசியமாகப் பிறரை குறை கூறுவது பாவம். முதலில் நீ அதை முழுவதும் நீக்க வேண்டும். மன்னித்து மறந்தால் மகிழ்ச்சி நிலவும்.

# மியன்மார் இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஆங் சாங் சூகி



மியன்மாரில்வரவிருக்கும் இடைத் தேர்தலில் அந்நாட்டின் ஜனநாயக லீக் கட்சி தலைவரும் நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சாங் சூகி முதன்முறையாகப் போட்டியிடு கின்றார்.

மியன்மார் அரசியல் தலைவர் களை விடுவித்தல், அரசியல் கைதி களை அங்கீகரித்தல், பழங்குடி யினருடனான மோதலை நிறுத்தி வைத்தல் என சமீபகாலமாக பல் வேறு ஜனநாயக நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் விதித்துள்ள பொருளாதா ரத் தடைகளை நீக்கலாம் எனக் கருதுகிறது.

தற்போது அவரின் தேசிய ஜன நாயக லீக்கட்சி தேர்தல் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங் கீகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தின் 48 இடங்களுக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல்மாதம் முதலாம் திகதி நடக்கவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடு வதாக முடிபுசெய்துள்ள சூகி தொடர்ச்சியாக தற்போது யாங்கூன் அருகில் உள்ள காவ்மு என்ற தொகுதியில் போட்டியிடுகிறார். இதன் முதற்கட்டமாக நேற்று முன் தினம் அங்கு தனது முதல் பிர சாரத்தினை ஆரம்பித்தார்.

மேலும் மியன்மாரில் இரண் டாவது மிகப் பெரிய நகரமான பர்மா, மாண்ட்லே உட்பட பகுதிகளில் பிரசா ரம் செய்யவுள்ளதாக அவரது செய் தித் தொடர்பாளர் நெயான்வின் தெரிவித்தார். (அ-2)

# பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 50 பேர் ஆப்கானிடம் சரணடைந்தனர்

ஹெஸ்ப் இஸ்லாமி என்ற பயங் கரவாத அமைப்பைச்சேர்ந்த 50 பேர் ஆப்கானிஸ்தான் அரசிடம் சரண டைந்தனர்.

இது குறித்து பக்லான் மாகாண பொலிஸ் உயரதிகாரி அசதுல்லா ஷிராசத் கூறியதாவது,

அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் மிகப் பெரிய தீவிரவாத குழுக் களில் ஒன்று ஹெஸ்ப் இ இஸ் லாமி என்ற அமைப்பு.

நாட்டின் பாதுகாப்பை நிலை நாட்டும் வகையில் அமைதி பேச்சுவார் த்தை நடத்த தீவிரவாத அமைப்பு களுக்கு ஆப்கான் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதை தொடர்ந்து கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி ஹமித் கர்சாய் ஹெஸ்ப்இ இஸ்லாமி அமைப்பி னருடன் பேச்சுவார்த்தை நடத்தி னர்.

அதன் பலனாக பக்லான் மர்கசி மாவட்டத்தில் 50 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சரணடைந்த னர். இதன்மூலம் தலிபான்கள் உட் பட 100க்கும் மேற்பட்ட தீவிரவாதி கள் அமைதி நடவடிக்கையில் இணை ந்துள்ளதாக அசதுல்லா தெரிவித் தார். (அ-2)

# சிரியாவில் தொடர்கிறது பெரும் பதற்றம்; சர்வதேசத்தை தலையிடக் கோரிக்கை



(டமாஸ்கஸ்)

சிரியாவில் தலைநகர் டமாஸ் கஸ் நகருக்கு அருகில் உள்ள பகுதி களை எதிர்த்தரப்பினடம் இருந்து கைப்பற்றுவதற்கு ஜனாபதியின் இராணுவம் முழுவீச்சில் இறங்கியுள் ளது. இந்நிலையில் அங்கு நிலை வரத்தை பார்வையிட்டு வந்த பிரதி நிதிகள் குழுவை அரபு லீக் திரும்பப் பெற்றுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதி ஆசர் த்தை பதவி இறக்கும்படி வலியுறுத் தவும் அவரிடம் இருந்து அந்நாட்டு மக்களை காப்பாற்றவும் நெருக்கடி கொடுக்கும்படி அமெரிக்காவிடம் வலியுறுத்த சிரியாவின் எதிர்க்கட் சிக் கூட்டமைப்பான சிரியா தேசிய குழு தலைவர் விரைவில் அமெரி க்கா செல்ல இருப்பதாக இக்கூட்ட மைப்பு அறிவித்துள்ளது. சிரியா வில் நடக்கும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த சர்வதேச சமூ கம் தலையிட வேண்டும் என வளை குடா நாடுகள் மற்றும் துருக்கி வலி யுத்தியுள்ளன.

இந்நிலையில் சிரியாவின் புற நகர்ப்பகுதிகளை கடந்த 28ஆம் திகதி எதிர்த்தரப்பு இராணுவம் கைப் பற்றியது. இதையடுத்து அப் பகுதி களில் அன்றைய தினமே ஜனாதி பதி இராணுவம் முழுவீச்சில் இறங்கி யுள்ளது. இதனால் அப்பகுதிகள் போர்க்களம் போல் காட்சியளிக் கின்றன.

இதற்கிடையில் அரபு மற்றும் ஐரோப்பிய நாடுகளால் ஐ.நா. பாது காப்பு குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இத்தீர்மானம் சிரியாவில் வெளி நாட்டுத், தலையீடுகளை நிறுத்த வகை செய்யாததால் ஆதரிக்க முடி யாது என ரஷ்யா தொடர்ந்து கூறி வருகின்றது.

ஐ.நா. பாதுகாப்பு குழுவில் இத் தீர்மானத்தின் அவசியம் குறித்து இன்று அரபு லீக் தலைவர் நபீல் அல் அரபி பேச உள்ளார். ரஷ்ய அதிகாரிகள் தங்கள் எதிர்ப்பை கைவிடும்படி அவர்களிடம் நேரடி யாக அரபி பேசி வருகின்றார். (அ-2)

# போதைக்குற்றத்தால் 22 பேர் பலியாகினர்

மெக்சிக்கோவில் இரவில் நடந்த போதைக்குற்றத்தால் 22பேர் பலி யானார்கள்.பிறந்தநாள் நிகழ்ச்சியில் நடந்த மது விருந்தில் மட்டும் 5பேர் பலியானார்கள் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபோல் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சாண்டியாகோவில் நடந்த விருந்தில் போதையால் துப்பாக்கியால் சுட்டதில் 5 பேர் பலி யானார்கள் என மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மற்றொரு சம்பவத்தில் சிகுவாகுவா மாகாண சிறைச்சாலையில் 4 கைதிகள் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மெக்சிக்கோவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 50 ஆயிரத் திற்கும் மேற்பட்டோர் போதைக் குற்றத்தால் பலியாகியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். (அ-2)

# விவேகானந்தரின் உருவச்சிலை அமெரிக்காவில் திறந்து வைப்பு

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவச் சிலையை அமெரிக் காவில் மத்திய நிதியமைச்சர் பிர ணாப் முகர்ஜி திறந்து வைத்தார். விவேகானந்தர் கடந்த 1893 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஆன்மீக சொற்பொழி வாற்றி னார். இவரது பேச்சுக்கு பலத்த வரவேற்பு இருந்தது. இந்த பேச்சு உலகப் புகழ் பெற்றது. இந் நிலை யில் 2 நாட்கள் அரசு முறை பயண மாக அமெரிக்கா சென் றள்ள மத் திய நிதியமைச்சர் பிர ணாப் முகர்ஜி, விவேகானந்தரின் 150 ஆவது பிற ந்தநாளை முன்னிட்டு புகழ்பெற்ற சிகாகோ ஆர்ட் இன்ஸ்டிடியூட்டில் விவேகானந்தரின் சிலையை நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

அப்போது உரையாற்றுகை யில்,

அமெரிக்காவில் இந்திய கலா சாரத்தை முதன்முதலில் பறைசாற் றியவர் விவேகானந்தர். அவருக்கு இங்கு சிலையை நிறுவ வேண்டும் என்பது இந்தியர்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். அந்த கனவு நிறைவேறியுள்ளது என்றார். மேலும் அருங்காட்சியகங்களில் விவேகான தரின் நினைவு நிகழ்ச்சிகளை நடத் துவதற்காக ரூபா.2.5 கோடி நிதி ஆர்ட் இன்ஸ்டிடியூட்டுக்கு வழங்கப்ப டும் என்றும் அறிவித்தார். இந்த விடயத்தில் இந்த மையம் மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றும் என்றார்.

இதுதவிர ரவீந்திரநாத் தாகூ ரின் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தி லாஸ்ட் ஹார்வெஸ்ட் என்ற பெயரில் தாகூரின் ஓவிய கண்காட்சியையும் முகர்ஜி ஆரம் பித்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவுக்கான இந்தியதூதர் நிருபமா ராவும் பங்கேற்றார். (அ-2)

## உலக தரிசனம்

# பேச்சுக்கு அழைத்தது நைஜீரியா; மறுத்தது போகோஹராம் அமைப்பு

(அபுஜா)

பேச்சுவார்த்தைக்கு வர வேண் டும் என்ற நைஜீரிய ஜனாதிபதியின் கோரிக்கையை அந்நாட்டு பயங் கரவாத அமைப்பான போகோ ஹராம் நிராகரித்து விட்டது.

நைஜீரியாவின் வடபகுதியில் முஸ்லிம்களும் தென்பகுதியில் கிறிஸ்தவர்கள் மற்றும் பழங்குடி யினரும் உள்ளனர்.

நாடு முழுவதும் இஸ்லாமிய ஷரியத் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். மேற்கத்தைய் பாணி கல்வியை கைவிட வேண்டும் எனக் கோரி போகோஹராம் பயங்கர வாத அமைப்பு செயற்பட்டு வரு கின்றது.

கடந்த 20 ஆம் திகதி நாட்டின் வடபகுதியில் உள்ள கனோ நகரில் இந்த அமைப்பு நடத்திய தொடர் தாக்குதலில் ஓர் இந்தியர் உட்பட 185 பேர் பலியாயினர்.

இந்நிலையில் ஜனாதிபதி குட்லக் ஜொனாதன் போகோஹராம் தனது கோரிக்கைகளுடன் பேச்சுவார்த் தைக்கு முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார்.

இது குறித்து அந்த அமைப் பின் செய்தித் தொடர்பாளர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில்,

ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். மறுபுறம் இராணுவம் எங்கள் நபர் களை கொன்று கைது செய்துள் ளது. ஜனாதிபதி இரட்டை வேடம் போடுகின்றார்.

பேச்சுவார்தைக்கான அவரது அழைப்பில் சிரத்தை இல்லை என குற்றம் சாட்டியுள்ளார். (அ-2)

# இந்தோ.வில் சூறாவளி 14 பேர் பலி;பலர் படுகாயம்



இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் திடீ ரென வீசிய சூறாவளி காற்றினால் 14 பேர் பலியாகினர். 60 இற்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர். 2ஆயிரம் வீடுகள் பலத்த சேத மடைந்தன.

இது குறித்து இந்தோனேசியா பேரழிவு மேலாண்மை மையத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி விடுத்துள்ள செய்தியில்,

இந்தோனேசியாவின் கிழக்கு கடலோர மாகாணங்களான ஜாவா, பாலி ஆகிய தீவுப்பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் புயல் சின்னம் தோன்றி இருக்கிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திடீரென சூறாவளி காற்று வீசி யது.இதனால் வீதியில் நடந்து சென்றவர்கள் உட்பட 14 பேர் பலியா கினர்.60 பேர் காயமடைந்தனர்.மேலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இந்த சூறாவளிக்கு இக்கி என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இது வலுவிழந்து மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது என்றார். (அ-2)

# சிரேஷ்ட வீரர்களை ஓய்வு பெற நிர்ப்பந்திக்க அவசரம் இல்லை

## தோனி கூறுகிறார்

இந்திய கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்கள் பலர் ஓய்வு பெற நிர்ப்பந்திக்க வேண்டிய அவசரம் எதுவும் இல்லை என அவ்வணியின் தலைவர் மகேந்திரசிங் தோனி கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் இந்திய அணி படுதோல்வியைத் தழுவியதையடுத்து, இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்கள் பலர் ஓய்வு பெற நேரிடலாம் என ஊகங்கள் வெளியாகின.

இந்த ஊகங்களுக்கு பதிலளிக்கும் முகமாகவே தோனி மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்திய அணியின் அடுத்த (டெஸ்ட்) தொடர் செப்டம்பர் மாதமே நடைபெறவுள்ளது.



எனவே தீர்மானம் மேற்கொள்வதற்கு போதிய அவகாசம் உள்ளது என தோனி தெரிவித்தார்.

இந்திய அணி வீரர்கள் சிலர் தமது கிரிக்கெட் வாழ்வின் கடைசி டெஸ்ட் போட்டியை அவுஸ்திரேலியாவில் விளையாடியுள்ளனர் என அவுஸ்திரேலியாவுடனான 4 ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்னர், அவ்வணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர்களான ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஆகியோர் இத் தொடரில் பிரகாசிக்க தவறினர். இம் மூவரும் இணைந்து 8 இன்னிங்ஸ்களில் மொத்தமாக 636 ஓட்டங்களையே பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய வீரர்கள் விளையாடிய விதத்தை தோனி பாராட்டியுள்ளார்.

இந்திய அணியைவிட அவர்கள் மிக சிறப்பாக விளையாடினர். அவர்கள் வெற்றி பெறுவதற்கு தகுதியானவர்கள் என தோனி கூறியுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணித்தலைவர் பதவியிலிருந்து தோனி நீக்கப்பட்டு, வீரேந்திர ஷேவாக் புதிய தலைவராக நியமிக்கப்படலாம் எனவும் ஊகங்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கவலை வேண்டாம் ஹர்பஜன் ஆறுதல்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்தது குறித்து கவலைப்படத் தேவையில்லை.

இது போன்ற நிலைமை உலகின் எந்த ஒரு அணிக்கும் ஏற்படலாம் என இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் ஆறுதல் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 0:4 என மோசமாக இழந்தது. இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி மோசமாக இழந்தது வருத்தம் அளிக்கிறது.

இது குறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை. ஒரு சில தொடர்களில் இது போன்ற மோசமான சரிவை சந்திக்க வேண்டியிருக்கும். இத் தொடரில் இந்திய வீரர்களின்செயல்பாடு திருப்தியாக இல்லை என்பது உண்மை. அதேவேளையில், விரையில்இந்திய வீரர்கள் எழுச்சிபெறுவார்கள் என நம்புகின்றேன்.

இந்திய அணி தோல்வியின் பிடியிலிருந்து மீண்டு, விரைவில் வெற்றிப்பாதைக்கு திரும்பும் என எதிர்பார்க்கிறேன்.

காயத்தில் இருந்து மீண்ட நான், விரைவில் தேசிய அணியில் இடம் பிடிப்பேன். சர்வதேசபோட்டிகளில் விளையாடும் முழு உடற் தகுதியுடனும் உள்ளேன். உள்ளூர் போட்டிகளில் எனது திறமையை நிரூபித்து மீண்டும் இந்திய அணிக்காக விளையாட காத்திருக்கின்றேன். இவ்வாறு ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

# இந்திய அணியின் தோல்வியை கொண்டாடும் பாகிஸ்தான்

அவுஸ்திரேலிய அணியிடம் இந்திய அணி படுதோல்வியடைந்ததை பாகிஸ்தான் ஊடகங்களும், ரசிகர்களும் கொண்டாடி வருகின்றனர்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளதற்கு அந்த அணி வீரர்கள்களையும், அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக்கையும் இந்திய ஊடகங்கள் பாராட்டியுள்ளன.

ஆனால் பாகிஸ்தான் ஊடகங்களோ, இந்தியா தோல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகரும், டாக்டருமான அம்பிரீன் என்பவர் கூறுகையில் அவுஸ்திரேலியாவிடம் இந்தியா படுதோல்வி கண்டுள்ளதும், பாகிஸ்தான் இங்கிலாந்தை வீழ்த்தியிருப்பதும் மகிழ்ச்



சியளிக்கின்றது.

பாகிஸ்தானிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்திய வீரர்களுக்கு அந்நாட்டு ஊடகங்கள் அறிவுரை கூறியிருப்பது எங்களுக்கு மிகுந்த மன நிறைவை அளிக்கிறது என்றார்.

முன்னாள் அணித்தலைவர் மொயின் கூறுகையில், ஐ.பி.எல் போட்டியில் எங்கள் வீரர்களை சேர்த்துக் கொள்ள இந்தியா மறுக்கும் நிலையில், பாகிஸ்தான் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

ஐ.பி.எல் போட்டியில் எங்களை புறக்கணிப்பது கோபத்தை ஏற்படுத்துகிறது. இப்போது எங்கள் அணியில் சிறந்த வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்றார்.

# 3 நாடுகள் கிரிக்கெட் ஆஸி அணி அறிவிப்பு

## ஷோன் மார்ஷ் நீக்கம்

தோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. இந்திய அணி தான் விளையாடிய நான்கு டெஸ்டிலும் தோற்று 0:4 என்ற கணக்கில் தொடரை இழந்தது.

இரு அணிகள் இடையே இரண்டு 20 ஓவர் போட்டி நடைபெறுகிறது. நாளை மற்றும் 3-ந் திகதிகளில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து இந்திய, அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித் தொடர் பெப்ரவரி 5-ந் திகதி முதல் மார்ச் 8-ந்திகதி வரை நடக்கிறது.

இதற்கான இந்திய, இலங்கை அணிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு விட்டன. அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அந்த அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஷோன் மார்ஷ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடரில் அவரது ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதனால் தேர்வுக்குழு அவரை நீக்கியுள்ளது.

மார்ஷ் 4 டெஸ்டில் (6 இன்னிங்ஸ்) 17 ஓட்டங்களையே எடுத்தார். சராசரி 2.83 ஆகும். 3 முறை டக் அவுட் ஆனார். பீட்டர் பாரஸ்ட் சேர்க்கப்பட்டு உள்ளார்.

வேகப்பந்து வீரர் ரியான் ஹரிசுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. விக்கெட் காப்பாளர் ஹடினுக்கு முதல் மூன்று போட்டிகளுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக மத்யூ வாடே இடம் பெற்றுள்ளார்.

மூன்று நாடுகள் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி வருமாறு,

மைக்கெல் கிளார்க் (அணித் தலைவர்), வோர்னர், பொன்டிங், பீற்றர் பாரஸ்ட், கிறிஸ்



டியன், மைக் கெல் ஹசி, டேவிட் ஹசி, மத்யூ வாடே, பிரட் லீ, ரியான் ஹரிஸ், மைக்கெல் ஸ்டார்க், சேவியர் டொகார்ட்டி, மெக்காய், மிக்சல் மார்ஷ்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளஇலங்கை, இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச சுற்றுப்போட்டிக்காக இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது. அதற்கு முன்னர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைமையகத்தில் நடைபெற்ற மத வழிபாடுகளிலும் இலங்கை அணியினர் பங்குபற்றினர்.



அவுஸ்திரேலியாவிலாவது வெல்ல வேண்டும்...

### பங்களாதேஷில் கொடூரம்

# கிரிக்கெட் மட்டையால் ரசிகர் அடித்துக் கொலை

பங்களாதேஷில் கிரிக்கெட் மட்டையால் ரசிகர் ஒருவரை நடுவர் அடித்து கொன்றார் இது பற்றி தெரியவருவதாவது,

பங்களாதேஷின் வடபகுதியில் இருக்கும் கிஷோர்கஞ்ச் மாவட்டத்தில் உள்ளூர் கிரிக்கெட் போட்டி நடந்தது. இந்தப் போட்டியின் போது நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்காத முடிபால் அதிருப்தி அடைந்த நஸ்ருல் இஸ்லாம் (வயது 15) என்ற ரசிகர் ஆடுகளத்தை நோக்கி ஓடிவந்தார்.

அவருக்கும் நடுவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரத்தின் உச்சத்துக்கே சென்ற நடுவர், வீரர் ஒருவரின் மட்டையை வாங்கி ரசிகரின் தலையில் கடுமையாகத் தாக்கினார். இதில் நிலைகுலைந்த ரசிகர் நஸ்ருல் இஸ்லாம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்று இரவே அவர் இறந்தார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ரசிகரை கிரிக்கெட் மட்டையால் அடித்துக் கொன்றநடுவர் தலைமறைவாகிவிட்டார். அவரை பொலிஸார் தேடிவருகிறார்கள். பங்களாதேஷில் அதிக புகழ்பெற்ற விளையாட்டு கிரிக்கெட் ஆகும். இந்தியா, இலங்கையுடன் இணைந்து அந்நாடு கடந்த உலக கோப்பையை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# சுழலை சமாளிக்க தெரியவில்லை –ஸ்ரொரஸ்

பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரில் 0-2 என பின்தங்கியுள்ள நம்பர்1 இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் ஸ்ரொரஸ் படுதோல்வி குறித்து அபுதாபியில் நேற்று முன்தினம் கூறியதாவது, டெஸ்ட் கிரிக்கெட் எப்போதுமே கடினமானது ஒரு வீரனின் பலத்தை விட பலவீனம் என்ன என்பது இதில் தெளிவாகத் தெரிந்துவிடும்.

சுழற்பந்து வீச்சை சமாளிக்கத் தெரியாததே எங்கள் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது.

மொத்தத்தில் சிறப்பாக விளையாடத் தவறிவிட்டோம். குறிப்பாக துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இதற்காக எந்த சாக்கு போக்கும் சொல்ல முடியாது.

இந்த வெற்றிக்கு பாகிஸ்தான் முழு தகுதி உடையது. இதில் இருந்து விரைவில் மீள்வோம் என நம்புகிறேன் இவ்வாறு ஸ்ரொரஸ் கூறியுள்ளார்.

# பகிடிவதையில் ஈடுபடுவோரை வெளியேற்றத் தீர்மானம்

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தும் ஆசிரிய பயிலுநர்களை வெளியேற்றுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் போலன்றி இவர்களுக்கு தொழில் உத்தரவாதம் உள்ளது. பயிற்சியின் பின் இவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்கப்படுகின்றனர் எனக் குறிப்பிட்ட கல்வி அமைச்சர் இவர்கள் மாணவர்களை சரியாக வழிப்படுத்த வேண்டியவர்கள். தமது கனிஷ்ட தொகுதி மாணவர்களை குரூரமாக நடத்தும் இவர்களால் எப்படி முன்னுதாரணமாக இருக்க முடியும்? எனக் கேள்வி எழுப்பினார். முன்பு பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டனர். இந்த முறை இவர்களை கல்லூரியில் இருந்து விலக்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் கூறினார். (ந-11)


## அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் தெரியத்தருவது, சிறுப்பிட்டி எரி பொருள் நிலைய ஒழுங்கையில் இருக்கும் "கூத்தர் சீமா குடியிருப்பும் கூத்தன் சீமா செம்பியவத்தையும், இயதையும் நளவளவும்" என்னும் பெயருடைய நிலப்பரப்பு நான்கு விஸ்தீரணமுள்ள காணியும் வீடும் சின்னத்தம்பி பரமேஸ்வரனுக்குரியது. குறித்த ஆதனத்தை வாடகைக்கோ, குத்தகைக்கோ கொடுக்கும் அதிகாரம் யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதை அறியத் தருகின்றேன்.

சின்னத்தம்பி பரமேஸ்வரனது
அற்றோனி தத்துவக்காரர்
சி. கமலாதேவி

(7402)

## ஜேர்மன் மொழியியலும் இலகு வழியும்

புதிய ஜேர்மன் மொழி வகுப்புக்கள் 05.02.2012-ல் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ் ஜேர்மன் மொழி வகுப்புக்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களாலும், ஜேர்மனியில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட துறைசார் ஜேர்மன் மொழி பேராசிரியர்களாலும் நடாத்தப்படுகின்றன. மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் 220 மணித்தியாலங்கள் வகுப்புக்கள் நடைபெறும். இவ் வகுப்புக்களில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு Gothe Institute ஆல் ஆரம்பிக்கப்பட்ட நூல் நிலையமும் பாவனைக்கு விடப்படும். மற்றும் வீடியோ, ஓடியோ இறுவட்டுக்கள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். மாணவர்கள் ஒரே தடவையில் A1 சான்றிதழ் பெறவும் பயிற்சிகள் வழங்கப்படும். ஜேர்மனிய சட்ட நிறுவனமான Muthman & Gorenflo இன் அனுசரணையுடன் பயிற்சிகள் நடைபெறுவதால் அந்நிறுவன சட்ட ஆலோசகர் திரு. M.T.S.இராமச்சந்திரன் அவர்கள் நேரடியாக கண்காணித்து வருகின்றார். ஜேர்மன் மொழியினை கற்றுத் தேறியோருக்கு ஜேர்மனிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறவும், குடும்பத்துடன் ஒன்றிணைந்து கொள்ளவும் அரிய சந்தர்ப்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம். இவ் ஜேர்மன் மொழி வகுப்புக்களில் இணைய விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

Europa Bildungs Forum.
No. 29, Palam Road,
Kandarmadam,
Jaffna.
T.P. 021 7200157

(C-5744)

உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் தற்பொழுது நம்பமுடியாத விலைகள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்


உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835


# நீதிபதி வீட்டு பூனை தற்கொலை செய்திருக்கும்! - பொன்சேகா



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உடற் கூற்று சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றுக்கு நேற்றும் அழைத்துவரப்பட்டார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கின் தீர்பினை வழங்கிய நீதிபதி தாம் அந்த தீர்ப்பை வழங்கிவிட்டு வீடு திரும்பியபோது அவரது வீட்டுப்பூனை இறந்து கிடந்ததாகக் கூறினார். ஆனால் அந்தப் பூனை தற்கொலை செய்திருக்கும் என நான் நினைக்கிறேன் என பொன்சேகா இதன்போது குறிப்பிட்டார். (ந-11)

# இலங்கையை காப்பாற்றவே... போர்க் குற்றவாளிக்கு உயர் பத...

## ஐ.நாவை கண்டிக்கிறார் விக்கிரமபா...


(கொழும்பு)

ஐ.நா சபை போர்க் குற்றச் சாட்டுகளிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக நவசமசமாஜக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

போர்க் குற்றவாளி எனக் கூறப்படும் சவேந்திர சில்வாவுக்கு உயர் பதவிகளை வழங்கி, அழகுபடுத்திப் பார்ப்பதன் நோக்கமும் இதுவே எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கானசிறப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும், தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், இறுதிப் போரின் போது தமிழர்களின் இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியபோதும், இலங்கைக்கு அனைத்து வகையிலும் அமெரிக்கா, இந்தியா, சீனா



உள்ளிட்ட நாடுகள் உதவின. ...
வாறான குணவியல்புகளைக் ...
ண்ட இந்நாடுகள் இலங்கை...
எதிராக ஒருபோதும் செயற்ப...
என்பதே எமது கருத்தாகும்.

ஐ.நா.சபை கூட இன்று அ...
க்கா உள்ளிட்ட மேற்குலகின் ...
வருடிகளாகச் செயற்படுகின்...
இலங்கையை போர்க் குற்றச் ச...
களிலிருந்து பாதுகாக்கும் ...
குடனேயே போர்க்குற்றவாளி எ...
கூறப்படும் சவேந்திர சில்வா...
பதவிகளை வழங்கி , ஐ.நா ...
படுத்திப் பார்க்கின்றது. தமிழர் ...
குத் தமது உரிமைகளை ...
றெடுப்பதற்குத் தற்போதுள்ள...
வழி அஹிம்சை போராட்டங்...
அதனை விரைவில் முன்னெ...
தமிழ்த் தலைமைகள் தய...
வேண்டும் என்றும் அவர் கூறி...
(ந-11)

# 13+ தீர்வு என நான் கூறி...

லாக்கலை எவ்வாறு மேற்கொள்வது என்பதையிட்டு நான் தனித்து தீர்மானிக்க போவதில்லை. மாகாண சபைகளுக்கு எவ்வாறான அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது என்பதையிட்டு நாடாளுமன்றமே இறுதி முடிபை எடுக்கும் என்றார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவுடனான பேச்சுவார்த்தைகளின்போது அரசியல் அமைப்புக்கான 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு மேலாக செல்வதற்கும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருப்பது தொடர்பாக வெளிவந்திருந்த செய்திகளையிட்டு பத்திரிகை ஆசிரியர்கள் இச்சந்திப்பில் கேள்வி எழுப்பினார்கள். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தான் அவ்வாறு தெரிவித்திருந்தாலும், அது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுதான் இறுதி முடிபை எடுக்கவேண்டும் எனக் கூறினார்.

இன நெருக்கடிக்கான அ...
யல் தீர்வு தொடர்பில் இறுதி மு...
எடுப்பதற்காக நியமிக்கப்பட்...
நாடாளுமன்ற தெரிவுக்குழு...
கான தமது உறுப்பினர்க...
பெயர்களை தமிழ்த் தேசியக் க...
மைப்பு இதுவரையில் பரிந்து...
காமல் இருப்பதையிட்டு கடுந்...
ணியில் குறிப்பிட்ட ஜனாதிபதி , பே...
வார்த்தைகளிற்கு வரும்பே...
தமிழ்த்தேசியக் கூட்டமை...ம்
தலைப் புலிகள் போன்றே ...
படுகின்றது எனவும் குறிப்பிட்...
ளார். (ந-11)

# திருகோணமலையில் அதிரடி...

திருந்தாராம்.

இது தொடர்பான விசாரணைகளின்போது இரசாயன பகுப்பாய்வாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

யார் இதனைச் செய்தார்கள் என்பது எமக்கு தெரியும். ஆனாலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது உள்ளது என பசில் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார் எனக் பிளேக் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் குறித்து இலங்கை இராணுவத்தினருக்கு போதியளவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் கடற்படையினருக்கு உரிய பயிற்சி அளிக்கப்படவில்லை என பிளேக்கிடம் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் தொடர்பில் சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனினும் கடற் படையினர் மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவே அதிகளவில் குற்றம் சுமத்தப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுடன் கடற்படையினருக்கு தொடர்பு ஏற்படுமென கருதாமையினால் அவர்களுக்கு மனித உரிமைகள் பற்றி விளக்க மளிக்கப்படவில்லை. கடற்ப...
யினருக்கு மனித உரிமை விவ...
ரங்கள் குறித்து பயிற்சியளிக்கப்...
வேண்டும் என ஜனாதிபதி க...
னார் என்று கூறிய பசில் ராஜபக்...
வின் திறந்த மனதுடனான க...
துக்கள் மனித உரிமை மீறல் தெ...
பிலான வெளிப்படைத்தன்மை ...
வேற்கப்பட வேண்டியது என ...
பேட் ஓ பிளேக் தெரிவித்துள்...
என்றும் விக்கி லீக்ஸ் தகவல் ...
யிட்டுள்ளது. (ந)

# அரசா...

மக்கள் மத்தியில் சென்று அவர்களை எழுப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்தினால் அரசை கவிழ்க்க முடியும். அதற்கான திட்டங்கள் தன்னிடம் இருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ந-11)

# ரணிலுக்கு...

விக்கிரமசிங்க இரகசிய வாக்...
ப்பின் மூலம் தெரிவு செய்யப்...
ருந்தாலும் இரகசிய வாக்கெடு...
ற்கு பயன்படுத்தப்பட்ட வாக்...
சீட்டில் இலக்கங்கள் குறிப்பிடப்...
இருந்ததால் அதன் இரகசியத்தன்...
பேணப்படவில்லை என மைத்...
குணரட்ண தனது மனுவில் ...
வித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த மனு...
எதிர்வரும் பெப்ரவரி 22-ம் தி...
விசாரணைக்கு எடுத்துக் கொள்...
கொழும்பு மாவட்ட நீதிபதி ஜி.ஏ...
கனேபொல அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் மனுவின் பி...
வாதிகளான ரணில் விக்கிரமசி...
உள்ளிட்ட செயற்குழு உறுப்பின...
களை நீதிமன்றில் ஆஜராகி விள...
மளிக்குமாறு நீதிபதி உத்தர...
பிறப்பித்துள்ளார். (ந-1...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...